சற்குருப்யோ நம:.





வேத பாஹ்ய அவைதிக பாசு பத தாந்திரிக

துவைத சைவ துர்வாதியாகிய

காரைக்குடி அறு பத்து மூவர் மடச்

# சொக்கலிங்கச் செட்டியாருக்குச்

# சூட்டுக் கோற்புச்சம்.

(இதில் பல வேதாந்திகள் எழுதிய 21 நோட்டீஸ்கள் அடங்கி யிருக்கின்றன.)

சென்னை, கோமளேசுவரன் பேட்டை,
சச்சிதாநந்தம்பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1919.

உ

சிவமயம்.

## காரைக்குடி அறுபத்து மூவர் மடச் சோக்க லிங்கச் செட்டியாரும், விஷ்ணு நிந்தை பெரியார் நிந்தையும்.

இவர் விநாயகர் புராணத்துத் தூர்வை யாசகப் படலமென்று பெயரிட்டு அச்சிட்டு வெளியிட்ட புஸ்தகத்தில், கோவிலூர் ஆண்டவரென்னும் ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞான தேசிக ஸ்வாமிகளைப் பலவாறு தூஷணமாக எழுதி யிருத்தலின், காரைக்குடி மூ. கு. சித. குடும்பத்தாரையும் பிள்ளையார்பட்டிக் கோவில் நகரத்தாரையும் நிந்தித்தவ ராகின்றார்.

துறவு ஸ்வாமிக ளென்னும் ஸ்ரீ அருணாசல ஞான தேசிக ஸ்வாமிகளையும், கருணாநிதியென்னும் ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக ஸ்வாமிகளையும் தூஷித்திருத்தலின், தேவி கோட்டை பிச. அரு. அரு. குடும்பத்தாரையும், வி. சித. குடும்பத்தாரையும், இலுப்பைக் குடிக் கோவில் நகரத்தாரையும் நிந்தித்தவ ராகின்றார்.

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிக ளென்னும் லோக குரு ஸ்வாமிகளைப் பலவாறு தூஷித் திருக்கின்றமையின், பிராமணர்க ளெல்லோரையும் நிந்தித்தவ ராகின்றார்.

பெரியோர்களைப் பரிபூரண மடைந்தவுடன் சமாதி வைக்காது காலிற் புரி கட்டி யிழுத்து முச் சந்தியிற் போடவேண்டுமென்று நிந்திக்கின்றார்.

ஸ்ரீ விஷ்ணு பகவான் நிந்தை மிகுதியாகச் செய்திருத்தலின், காரைக்குடியில் வேங்கடாசல பதியைக் குல தெய்வமாகக் கொண்ட நகரத்தாரையும், அரியக்குடி நகரத்தாரையும், நிந்தித்தவ ராகின்றார்.

வேத நிந்தை, பிராமண நிந்தை, வேதாந்த நிந்தை முதலியன பலவுள்ளன.

இவை யாவும் நியாயந்தானோ வென்று இதைக் கண்ணுறும் நகரத்தார்களனைவரும் உணர்ந்து அவரது யோக்கியதையைத் தெளிவாக அறிவார்களாக !

25—11—17. ☞ சச்சிதாநந்தம்.

உ

கணபதி துணை.

சற்குருப்யோ நம:

# காரைக்குடியி லிருந்து வெளிவரும் ‘ மனோ ரஞ்சனி ’ என்னும் பத்திரிகையில் ‘ கோவிலூர் உபந்நியாசப் பத்திரிகையின் மேல் கேள்வி ’ என்று தலை முடி சூடிக்கொண்டு காரைத் திராவிடன் என்னு மறு பேரைத் திரமாக இட்டுக் கொண்டு வெளிவர வறியாது ஒட்டிக் கொண்டு வெளிவந்த காரைக்குடி ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரது

# புரட்டுக் கடாவை விரட்டும் விடை.

---

ஓ காரைத் திராவிடரே! நீர் என் பேரைப் புரட்டத் தலைப்பட்டீர்? உம்மால் ஒட்டப்பட்ட கடிதம் பசையின்மையால் சற்றே பற்றுதலொழிய உமது உள்ள பெயரை உலகத்தாருக்கு அது வெளியாக்கி விட்டதே. ஒட்டுப் பெயர் உமக்கு ஒட்டாப் பெயராயிற்றே. ஒரு சிறு கடிதப் பற்றை நம்பி யிவ்வித காலாகோலத்துக்கு நீர் ஆளாகலாமா? பரிதாபம்! உம்மால் வினவப்பட்ட வினா வடங்கிய வியாசம் இராக்ஷஸ௵ ஐப்பசி௴ 14உயில் நாகபட்டணம் செந்தமிழ்ச் செல்வி யென்னும் பத்திரிகையிலே ஓர் உலக உபகாரி என்பவரால், முன்னொரு முறை பிரசுரிக்கப்பட்டிருக்கிறதே! நீர் என் அவ்வுலக உபகாரி வியாஸத்தைத் திருடத் தலைப்பட்டீர். இதனால் உம்மிடத்துப் புரட்டுத் தொழிலோடு திருட்டுத் தொழிலும் புகுதலாயிற்றே! நீரே அவ்வுலக உபகாரி யென்பீரேல், ஒரே விஷயத்தைப் பல பத்திரிகையில் வெளியிட நேரின், ஒரே பெயரை யன்றோ கீழே கைச்சாத்தாக இடுதல் மரபு. அவ்வாறின்றி ‘செந்தமிழ்ச் செல்வி’ பத்திரிகையில் உலக உபகாரி யென்றும், காரைக்குடியிலிருந்து வெளிவரும் பிங்கள௵ மார்கழி௴ மனோரஞ்சனிப் பத்திரிகையில் காரைத் திராவிடன் என்றும் மாறுகொள வரையலாமா? இதனால் மாறுகொளக் கூற லென்னுங் குற்றம் நுமது தலையிற் றங்கலாயிற்றே! இந்தத் திருட்டுக்கும் புரட்டுக்கும் இடையில் வேதாகம புராணேதிகாசாதி சகல சாஸ்திரப் பண்டிதரென்றும், சுத்தாத்வைத சைவ சித்தாந்த சிகாமணி யென்றும், உண்மை யுரைப்போனென்றும், நல்லொழுக்க நயந்தோனென்றும், ஸ்ரீ வன்றொண்டரவர்கள் மாணாக்கர் என்றும், பலவித பெயர்களை யிரவல் வாங்கத் தலைப்பட்



டீர். இஃதென்ன விபரீதம்! அத்தகைய பெறுதற்கரிய பெரிய பெயர்களை நீர் வகிக்க அநேக அரிய தவஞ் செய்தாலும் அவை யுமக்கு அடுக்குமா? ஒருவாற்றானும் அடாது! ஒரு போதும் அடாது!

“ இல்லை! இல்லை! நான் பெயரை யிரவல் பெறவில்லை. அவர் தான் நான். நான் தான் உலக உபகாரி, நான் தான் ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார். வயோதிகப் பருவ வலியால் இவ்விதப் புரட்டுத் தொழிலுக்குந் திருட்டுத் தொழிலுக்கும் என் மனம் புகுதலாயிற்று. பெயரைப் பற்றியேன் இவ்வளவு விவகாரம் ” என்பீரேல், நுமது பெயரை யொரு நெறிப்பட எழுத அறியாத நீவிரன்றோ? பிறர்பா லிலக்கணக் குற்றங் கற்பிக்க எழுபவர்? இவ்விதப் புரட்டுத் தொழிலுக்கு விதி யெந்த இலக்கண நூலில் வரையப்பட்டிருக்கிறது. நூற்புரட்டு, சரித்திரப் புரட்டு, மதப் புரட்டு, மதாசாரியர் புரட்டு, முதலிய பல புரட்டும் செய்துழல்வது போதாமல், இப்போது பெயரைப் புரட்டற்கும், நீவிர் ஆளானீர். நுமது புன்செய்கை நன்று! நன்று!! இதனால் உமது புரட்டுத் தொழில் வெளியானதாலே இனி உம்மைக் காணும் பள்ளிச் சிறாரும் “ ஓ! பேரைப் புரட்டும் காரைத் திராவிடரே! ’ என்று எள்ளி நகைப்பாரன்றோ? இன்னும் அரசாங்கத்தாரால் விதிக்கப்பட்ட பெயர் மாறாட்டம் என்னுங் குற்றமும் உமது தலையில் வந்து விடியுமன்றோ? “ கோவிலூர் உபந்நியாசப் பத்திரிகையின் மேல் கேள்வி ” என்ற அளவிலே, உமது கேள்வி, பத்திரிகையின் மேற் சென்றதே யொழிய, கோவிலூர் உபந்நியாசத்தின் மேற் செல்லவில்லையே! உபந்நியாசத்தின்மேற் செல்லின் உபந்நியாசகர்களெல்லாம் பிரபல பண்டித சிகாமணிகளாகிய சாஸ்திரியார்களும் சாதுக்களும் ஆவார்களே! அவர்கள் நுமது புரட்டுக் கடாவைச் சும்மாவா விடுவார்கள்? அப்பெரியோர்கள் பிரபல சுருதிப் பிரமாணங்களாகியசூட்டுக் கோலாற் சூடிட்டுத், தருக்க யுக்திகளாகிய தாற்றுக்கோலாற் றாறிட்டு, அநுபவமாகிய சாட்டை வாரால் புரட்டிப் புரட்டி ஓங்கி யோங்கி யடிக்கு மடியில் உமது புரட்டுக் கடா விரட்டப்பட்டு, புண் பட்டுக், குத்துப் பட்டுப் பொறி கலங்கி, நெறி மயங்கிப் புகுமிட மறியாது புலம்பித் தவிக்கத் தக்கவராவீர். அந்தோ! பரிதாபம். இத்தகைய புரட்டுக் கடாவால் நுமக்குப் பொருந்தும் பயன் யாது? உபந்நியாசப் பத்திரிகை யிப்போதுதான் கிடைத்த தென்றீரே! நீரே உண்மை யுரைப்போர்! இதே விஷயத்தைச் சென்ற ஈராண்டுக்கு முன் செந்தமிழ்ச் செல்வி யென்னும் பத்திரிகையில் வெளியிட்டபோது, “ இப்போது தான் ஷை பத்திரிகையைப் பார்க்க நேர்ந்தது என்றீர்” இவ்வருடம் “மனோ ரஞ்சனி” என்னும் பத்திரிகையில் வெளியிட்ட காலையில் “ இப்போது தான் ஷை பத்திரிகை கிடைத்தது என்றீர். சென்ற காலத்தையும் இப்போது என்றீர். நிகழ் காலத்தையும் இப்போதென்றீர். நீர் பத்திரிகையை வாசித்தது இராக்ஷஸ வருடத்தில் ஆனால் அது உமக்குக் கிடைத்தது இந்த வருடத்தில்! இந்தக் கால வேற்றுமையும்மை யடைந்ததற்கு எந்த இலக்கண நூலில் விதி கூறுகின்றது. உமது

காலம் பலன் சரியா யில்லை ! அமைக. இவ் வருடம் உமக்குக் கிடைத்த
பத்திரிகையில் நீர் கூறிய இலக்கண வழுப் பிரயோக முள்ள வாக்கியமே
காணப்பட வில்லையே. உமக்கு மதவாதஞ் சேட்டித்து, சமய பித்தந் தலைக்
கேறி சாத்திர வையம் மேலிட்டதால் உமது பெயரை யெழுதவும், விஷ
யத்தை வெளியிடவும், வகை யறியாது, தட்டுக் கெட்டுத் தலைதடுமாறுகி
றீர். கூடிய சீக்கிரத்தில் அம்முத்தோடங்கள்நீங்கத் தக்க கண்டன வௌஷ
திகளைப் பண்டித சிகாமணிகள் கொடுக்கப் பெற்றுய்வீர். அவ்வௌஷதம்
பெறுஞ் சுப திநத்தைப் பிரார்த்தித் தமைக !

நீர் உபந்நியாசப் பத்திரிகையிலுள்ள விஷயத்திற்சென்று ஆராய்ந்து,
" தாங்கள் உபந்நியசிப்பிக்கும் உபந்நியாசமானது பலன் பெறுவா ரில்லாத
கோலாகலமே யன்றி வேறு யாது ? அதில் யாருக்கு என்ன பலன் ?
இதற்கு விடை தந்தருளத் தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்"
என்று முடிவுரை கூறி யிறைஞ்சினீர். நீர் வயோதிகரா யிருப்பதாலும்,
மிகவும் மன்றாடிக் கேட்பதாலும், உமக்கு விடை தந்தருள வேண்டுவது
அவசியமே யாம். கோவிலூர் ஸ்ரீதிருநெல்லை நாயகியார் ஆடிப்பூர
மகோற்சவங் கொண்டாடக் கரத்தில் கங்கணம் பூணுஞ் சுபதிநத்தன்றே,
அவ்வம்மையாரின் திருவருட் செல்வராகிய ஸ்ரீ ஆண்டவரது வேதாந்த
மடாலயக் கட்டடத்தின் சந்நிதானத்திலே,நிறுவப் பெற்றுள்ள "பிரமவித்தி
யாப் பிரசாரணி" என்னும் பெயரினையுடைய சபாநாயகியாரும், உபந்நி
யாச மகோற்சவங் கொண்டாடத் தமது திருக்கரத்திலே, கங்கணங் கட்
டிக்கொண்டு, பனிரண்டு திநம் வரையில் ஆங்குக் குழுமிய பக்த கோடி
கள் கேட் டானந்திக்கும் வண்ணம், பிரம வித்தியா சம்பந்தமான பற்பல
பிரசங்கக் காட்சிகளைத் தந்தருளி வருகிறார் என்பது உலகப் பிரசித்தமே
யாம்.

நீரோ, தூரத்தி லிருப்பவர் போலும், ஒன்று மறியாதவர் போலும்,
' உமது பிரசங்கத்தைக் கேட்பவர் யார் ? அவர் சொரூபத்தைச் சொல்
லும் ' என்றீர். " உன்னை நீ யறிவா யாகி லுனக்கோரு கேடுமில்லை "
என்று பெரியோர் பணித்தவாறு, உமது சொரூபத்தை யுள்ளவா றுணர்ந்
திருப்பீராயின், கேட்பவர் சொரூபத்தை யாம் சொன்னா லுமக்கு அது
பஞ்சுத் ,துய்யில் நெருப்பு பற்றியதுபோ லுடனே பற்றும். உமது
சொரூப நிச்சயந்தான் உமக்குச் சூனியமாயிற்றே ! அப்படி யிருக்க; உமக்
குச் சொல்லின் அது விழலுக்கிறைத்த நீர் போல் வீணாகுமன்றே? என்றா
லும் ஒருவாறு சொல்லக் கேளும். இவ்வருடம் மகோற்சவ காலத்திலே
தேவிகோட்டை ஜமீன்தார் ஸ்ரீமான் அள. அரு. அருணாசலம் செட்டியா
ரவர்களும், மேற்படி யூர் டிப்டி கலெக்டர் ராய்ப்பகதூர் ஸ்ரீமான் T. N.
சிவஞாநம் பிள்ளை யவர்களும், இன்னும் பற்பல பிரபல வித்தியா விநோ
தர்களும் விஜயஞ் செய்திருந்த காலையில், எங்கள் பரம்பரை, வேதாந்த
பாஸ்கரரும், நியாயச்சந்திரரும் ஆகிய ஸ்ரீ வீர. சுப்பையசுவாமி யவர்
கள் ஈஸ்வர பக்தி யென்னும் விஷயத்தைப் பற்றி, மிக அழகாகவும் இனி



மையாகவும், விரிவாகவும், சுருதி யுக்தி யநுபவ சம்மதமாகவும், பண்டிதர்
பாமரர் முதலிய பலரும் கேட்டுச், சிரக் கம்பமும், கரகோஷமுஞ் செய்து
ஆநந்தங் கொள்ளும்படியாகவும், ஓர் அற்புத உபந்நியாசம் புரிந்தார்கள் என்
பது யாவரும் உணர்வர். அப்போது கண்ணியமும் புண்ணியமும் நிறை
ந்த அவ்வதிகார புருஷர்கள், " ஓ சுவாமிகளே ! நீங்கள் தாம், ஈஸ்வர
னில்லை, சகத்தில்லை, சீவனில்லை " என்று சொல்லுபவர்க ளாயிற்றே !
அவ்வாறிருக்க, ஈஸ்வர பக்தியைப் பற்றி நீங்க ளுபந்நியசிப்பது எவ்வாறு
பொருந்தும் ?" என்று அந்தச் சுவாமிகளை ஏன் கேட்கக் கூடாது ? நும்
போன்ற நுண்ணுணர்வு அவர்களுக் கில்லைபோலும். அவர்க ளவ்வாறு
வினவி யிருப்பின், அதற்கேற்ற விடையை அச்சமயம் அந்தச் சுவாமிகள்,
அவர்கள் மனத்திற்குப் பொருந்தும் வண்ணங் கூறி யிருப்பார்கள். நீர்
பெற்ற செல்வமும், கல்வியும், அதிகாரமும் அவர்கள் பெறவில்லைபோலும்.
உம்மைப்போல், பொய்யும், புரட்டும், புனைசுருட்டும் பொருந்திய வுலுத்த
குணமுள்ளவர்களா அப் புண்ணிய சீலர்கள் ? அவர்கள் கல்வியை நல்லா
சிரியர்பால் வரன் முறையாகக் கற்று வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களின்
தாரதன்மியத்தையும், அந்தரங்கத்தையும், கசடறத் தெளிந்து, வித்யா பூஷ
ணம் பூண்டு, விளங்கும் உத்தமப் பிரபு சிகாமணிகளெனப் பல்லோராலுங்
கொண்டாடப் பெறும், பாக்கியமுற்ற பெருந்தகையாளர்க ளன்றோ ? இவ்
வாறு ஜமீன்தார்களும், கலெக்டர் முதலிய அதிகார புருஷோத்தமர்களும்,
மற்றும் எவ்வளவோ சாஸ்திரிகளும், நகரத்தார்களும், சாதுக்களும், பிற
ரும், ஒவ்வொரு வருடமும் எமது சபைக்கு விஜயஞ்செய்து, ஆங்கு நடை
பெறும் உபந்நியாசங்களைக் கேட்டுப் பலவித ஆசிமொழிகூறி யானந்த பர
வச மடைந்து வருகிறார்களென்பது அவ்வவ்வருடத்தில் வெளியிடப்பெ
றும் எமது சபையின் அறிக்கைப் பத்திரத்தால் நன்கு விளங்கும். அவ்வா
றிருக்க, உபந்நியாசம் நடைபெறு மிடமாகிய இக் கோயிலூருக்கு ஒரு
மைல் தூரத்திலே நீவிர் குடியிருந்தும், எமது உபந்நியாசங்களைக் கேட்டுப்
பயன்பெறத் தக்க ஆகூழ் வலியின்றிப் போகூழ் வலியின் புணர்ப்பினாலே
இவ்விடம் வருவதற்குக் காலில்லாத முடவரும், மகோற்சவக் காட்சிகளைக்
கண்டு களிக்கக் கண்ணில்லாத குருடரும், உபந்யாச மொழிகளைக் கேட்கத்
தக்க செவியில்லாத செவிடரும், உபந்நியாசங் கேட்ட பாவாணர்கள் பல்
லோரும் பற்பல பாடல்களால் பலவாறு புகழ்ந்து கொண்டாடுவதைப்
போல் புகழ்ந்துகூறத் தக்க வா யில்லாத ஊமையும், நீவி ரானீரே என்ப
தைக் குறித்து மிகவும் விசனிக்கின்றோம். பற்பல நகரத்தார்களும் நீண்ட
தூரத்தி லிருந்தும் வந்து கேட் டானந்திக்கிறார்கள். நீரோ ஒரு மைல்
தூரத்திலிருந்தும், வந்து கேட்டற்கு உமக் கிடங்கொடாத உம்முடைய
ஊழ், போகூழ் என்பதற்கு வேறு பிரமாணம் வேண்டுமோ ? இதுவே
போதிய சான்றாம். ' தண்டா மரையி னுடன் பிறந்தே தண்டே னுகரா
மண்டூகம்' என்ற பெரியார் வாக்கிற்கு நீரே கரியானீர். அந்தோ ! நுமது
போகூழ்வலி போனவா றென்னே !

வேத வேதாந்தங்களி னுண்மையை யுணர்ந்து, அவ்வழியிலுறைத்து நின்று ஆனந்த மயமாகிய மோக்ஷத்தை அனைவரும் அடையும் வண்ணம், எம்முடைய குலமணியா யவதரித்து, இளமையிலேயே சற்குருவை யடைந்து, அவருக் கிடையறாத் தொண்டு பூண்டு, வித்தையை விதிப்படி பயின்று, அது கூறிய அடக்கம், அன்பு, அருள், வாய்மை, வயிராக்கியம் முதலிய உத்தம குணங்களை யுற்று, சாதந சதுட்டயங் கைவரப்பெற்று, தேக சுதந்தரம், போக சுதந்தரம், ஜீவ சுதந்தரம் முதலிய யாவற்றையுஞ் சர்வ சுதந்தரமாகத் தன்னை யாட்கொண்ட குருபானுக்குத் தத்தஞ் செய்துவிட்டு, துறவொழுக்கம் பூண்டு, ஒப்புயர்வற்ற ஆனந்த பூரணராய் சுவாநுபூதி மகானுபாவராய் விளங்கும், பரம கருணாநிதியாகிய ஓர் ஞானாசிரியர் உமது அருகே ஒரு மைல் தூரத்தி லெழுந்தருளி யிருந்து தம்மை யடைந்த பக்குவர்களுக்கு ஞானானுக்கிரகம் செய்து கொண்டிருக்க, அப்புண்ணிய சீலரை வழிபட்டு நும தையத்தைப் போக்கிக் கொள்ளக் கருதாது தான் தோன்றித் தம்பிரானாய்த் தமிழிலுள்ள சிற்சில இலக்கண இலக்கியங்களைக் கற்ற மாத்திரத்திலே யிறுமாப்புற்று, பிரமம், கூடஸ்தன், ஈஸ்வரன், சீவன், செகத்து, என்பனவற்றின் பொருள்களைக் கண்டவர்போல், பலவாறு பிதற்றலானீர். நீர் இவ்வாறு கண்ட கண்ட விடங்களிலெல்லாம் பிதற்றிக்கொண்டு திரிதலை யுணர்ந்தே, ஒவ்வொரு வருடத்தும் இவ்வூர் உற்சவப் பத்திரிகையிலும், உபந்நியாசப் பத்திரிகையிலும், "ஐய மிருப்பவர்கள் வந்து கேட்கும் சாஸ்திர விஷயமான கேள்விகளுக்குத் தக்க உத்தரங் கூறப்படும்" என்றும் வெளியிட்டிருக்கின்றேம். இஃதிங்ஙனமாக, பத்திரிகை வாயிலாக ஆத்ம ஞானத்தை யடையப் பார்க்கிறீர் நீர். பன்னிரண்டு வருடம் ஞானாசாரியர் பாதத்தைக் காத்தவருக்கும் விளங்குதற்கரிய பிரம ஞானம், உமக்குப் பத்திரிகை வாயிலாகவா விளங்கும்?

"சூரியனே பொந்துக்குள் நுழைந்து விட்டான். வெளியில் வர வழி தெரிய வில்லையென்று இரங்கி, அதற்காக வெளிச்சங் காட்டுகிறவர்கள், சாஸ்திரிகளும், சாதுக்களுமாகக் காட்டுவிக்கிறவர்கள் தாங்களுமா யல்லவோ முடிந்தீர்கள்" என்று பிதற்றுகிறீர். உம்மைப்போல், "பெயர் வெளிப்பட்டால் பெருமோசமாகும்" என்று பயந்து பத்திரிகையில்கூட நேராய் எதிர்த்துநின்று வாதம் புரிய முன்வர ஆற்றாது, ஒட்டுப் பெயரை யொட்டிக் கொண்டு, வெளிவருபவர் யாங்களல்லர் என்பது உலகத்தார் அறிந்த விஷயமேயாம். ஆயிரக் கணக்கான பொருளைச் செலவிட்டு, பல தூரத்திலிருந்து பற்பல பண்டித சிகாமணிகளை வரவழைத்து, பல்லாயிரஞ் சனங்கள் மத்தியில், ஒவ்வொரு வருடமும் பன்னிரண்டு தினம் வரையில், எமது மத சித்தாந்தத்தை வெளியிட்டு வருகிறோமென்பது நகரத்தார்களும் பிறரும் அறிந்ததேயாம். இஃதிவ்வாறு பிரசித்தமா யிருக்க, யாங்கள் பொந்துக்குள் ளிருந்து கைகாட்டுகிறோமா? நீர் கடிதத்தைமேலே யொட்டிக்கொண்டு ஒளிந்து சந்துக்குள் ளிருந்து கைகாட்டுகிறீரா? இதனை நீரே யுற்றுநோக்கி யொரு நெறி யடைவீராக! வேத சம்பந்தமான அத்து



வித மதத்தின் கோட்பாடுகளை யுள்ளவா றுணர்ந்துரை யாடாது, திரிபுணர்ச்சிகொண்டு, வேதாந்திகள் 'ஈஸ்வரனில்லை, செகத்தில்லை, சீவனில்லை, பாவ புண்ணியமில்லை, சுவர்க்க நரகமில்லை, பந்த மோக்ஷமில்லை என்று சொல்லுகிறார்கள் என்று' பற்பல புரட்டுப் பத்திரிகைகளையும், பொய்ச் சரித்திரங்க ளடங்கிய, பகட்டுப் புத்தகங்களையும் நீர் வெளியாக்கிவிட்டால், 'உலகப் பிரசித்தியுற்ற கோவிலூர் மடாலய சாதுக்களிடத்திலும், வேதாந்திக ளிடத்திலும், நகரத்தார்களும் பிறரும் விருப்பங் குறைவார்கள்' என்று நீர் எண்ணிய அவல எண்ணம், ஆயிரங்கோடி சென்மமெடுத்து, அக்கினி மத்தியிலே, ஊசி முனையிலே, ஒருவிர லூன்றி நின்று அருந்தவம் புரிந்தாலும், நிறைவேறத் தக்கதன்று என்பது அறிஞர்கள் அறிந்ததேயாம். "மேலே உமது கால பலன் சரியாயில்லை என்று" சுட்டப்பட்டிருக்கிறதன்றோ? அதனால், நீர் அவலமதி கொண்டெழுதிய "விநாயக புராணத்துள்ள தூர்வை யாசகப் படலம்" என்ற நூலில் உம்மால் புனையப்பட்டுள்ள புரட்டுகள் பலவும் கூடிய சீக்கிரத்தில் புத்தக ரூபமாக வெளிப்படுத்தப்படும். அதனையுங் கண்டு உம தவல மதிக் கிரங்கி மன மழுங்குவீ ராக!

இதனைக் கண்ணுறும் நகரத்தார் முதலிய யாவரும், அப்புத்தகத்தையும் இனாமாகப் பெற்று வாசித்து, இவரது திருட்டுத் தொழிலையும், புரட்டுத் தொழிலையும் தெளிவாகக் கண்டு இவருக்கு இடித்திடித்துப் புத்தி புகட்டுவார்களென, எமது ஆண்டவ ரென்னும் ஸ்ரீ முத்து ராமலிங்க ஞாந தேசிக சுவாமிகளின் திருவடிக் கமலங்களைச் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கின்றேம்.

பிங்கள௵
பங்குனி௴ 14௳

இங்ஙனம்,
காரியதரிசி,
பிரஹ்ம வித்தியாப் பிரசாரண சபை,
கோவிலூர்.

## காரைக்குடி

## ஸ்ரீமத் ராம. சொ. சொக்க லிங்கச் செட்டியா ரவர்கள் செய்துள்ள

# பல புரட்டுட் பிரபல புரட்டு.

## கோத்தமங்கலம்

## (தந வைசியனது தப் பபிப்பிராயத்தைத் தண்டித்தல்.)

அறிவிற் சிறந்த அன்பர்காள் ! நகர வைசிய நண்பர்காள் !!

காரைக்குடி, ராம. சொ. சொக்க லிங்கச் செட்டியார் என்பார், பற் பல சற்குணங்களும் நிறைந்த மகா வுத்தம ரென்றும், அற்பமுங் குற்ற மற்ற அவரிடத்து இல்லாத புரட்டுத் திருட்டு முதலிய சில ஈன குணங்க ளைக் கற்பித்து, யாம் புரட்டுப் பத்திரிகை வெளியிட்டிருக்கின்றே மென் றும்' கொத்த மங்கலம்—தந வைசியன் என்னும் பெயர் பூண்ட ஓர் நண் பர் " சைவ பரம்பரைத் தந வைசிய நகரத்தார்களுக்கு விஞ்ஞாபநம் " என்ற பெயரை யுடைய பத்திரிகை யொன்று வெளியிட் டிருப்பதாகக் காணப்படுகிறது.

இவர் மேற்படி செட்டியா ரிடத்துத் தனக்குள்ள அபிமாநத்தா லவ ரைப் புகழ முன் வந்து, " கணைகொடி தியாழ்கோடு செவ்விதாங் கன்ன, வினைபடு பாலாற் கொளல்." என்ற தேவர் திருவாக்கை யறியு மியல்பில ராய், எம்மிடத்தில்லாத பல வீன குணங்களையுங் கற்பித்து, உண்மை யறி யாத அறிவிலி யெனத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். " பானை சோற்றுக்குப் பதம் ஒன்று " என்னும் பழமொழிக் கிணங்க, இந் நண்ப ருக்கு, அச் செட்டியார் செய் துள்ள புரட்டுகள் பலவற்றுள், உலக மறிந்த ஒன்றை உள்ளவாறு இதனடியி லெடுத்துக் காட்டி, உண்மை யுணர்த்தி அறி வுறுத்தி இவர் கொண்ட தப் பபிப்பிராயத்தைத் தகர்த் தொழிப்பாம்.

ஓ தந வைசியரே ! நன்ருய்க் கவனியும். நீவிர் கசடறக் கற்றவரா யிற்றே. உல கெங்கும் புகழும் எமது பரம ஞானசாரியராகிய, கோவி லூர் ஆண்டவர் என வழங்கும் ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிக சுவாமி களின் " சுவாநுபவத் திரு வாக்கு " என்னும் நூலில்,

" வானுடர் மணம்பொருந்தும் வாழ்வு நினையாதே மண்ணுடர் பதி யடையும் வாழ்க்கை நினையாதே, நானெனென் றில்வாழ்வில் நண்ணியுழ லாதே நாலிரண்டு சமயநெறி நாடியலை யாதே, ஆனாலும் அத்துவித நிலை



யைமற வாதே அகம்புறமும் ஒருருவை யன்றியுண ராதே, தேனுடுங் காவின்மலர்த் தேனூறு பாயுந் தென்கழனித் திருநெல்லை மின்பாத நாடே"
என்ற திரு நெல்லை யம்மை ஸ்தோத்திர ரூபமாகிய இத் திரு விருத்தமும், ஒன்று.

" ஒளியப் போய்த் தலையாரி வீட்டில் ஒளிந்தான் " என்னும் முது மொழிக் கிணங்க, நீர் புகழத் தலைப்பட்ட மகா வுத்தம குண சிகாமணியா கிய செட்டியார் தாம் வெளியிட்டுள்ள 'வேதாந்தம்' என்னும் ஓர் சிறு ஆபாசச் சுவடி யீற்றிற் பதினேழாம் பக்கத்திலே, வேதாந்த நெறி யொழு குங் கோவிலூர் மடாலய சாதுக்களை மாயா வாதியரென்று கூறி, அவர் கள் கொள்கையைக் கண்டிக்கத் தலையிட்டு அதற்கு மேற்கோள் தடவிப் பார்த்துப் பரமாத்வைத சித்தாந்தம் நிலைநிறுத்தப் பெற்ற இத் திருப் பாட லிலே, " நானெனென் றில்வாழ்வில் நண்ணியுழ லாதே " என்ற பாகத்தை " நாம் பிரமம் என்று சொல்லி நண்ணியுழ லாதே " என்று அவல மதி கொண்டு புரட்டி யச்சிட்டு வெளியிட் டிருக்கிறார். இவர் இவ்வாறு செய் தது, உண்மை யுணராது அவசரப் புத்தி கொண்டு நடுநிலை தவறி வெளிக் கிளம்பிய நும்போன்றவரை யேமாற்றவா? அல்லது வேதாந்திகளை யேமாற்றவா? அவ்விரு நூற்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, உண்மை யுணர் ந்து, உமது செட்டியாரின் வஞ்சச்செயலை நெஞ்சாரக் கண்டு, அவரது புரட் டேத்தை நாறும் பெருவாயை யடக்கி யொழுகுவீராக !

நீர் எம்பால் வீணே சுட்டிய பல புரட்டில், ஸ்ரீ ஆண்டவரது அநுப வாமிர்த அருள்வாக்கையே புரட்டி யச்சிட வெளிவந்த மகா பாவியினும் பாவியாகிய நுமது சற்குணச் செட்டியார் செய்துள்ள இந்த அண்டப் புர ட்டை யெந்தப் புரட்டி லிணைக்கக் கருதுகிறீர்? எழுத்துப் புரட்டிலா? சொற் புரட்டிலா? வாக்கியப் புரட்டிலா? சாஸ்திரப் புரட்டிலா? நீர் காட் டிய எல்லாப் புரட்டும், இந்த ஒரு புரட்டிலேயே யடங்கத் தக்கதாய், நும் மையும் நீர் புகழத் தலையிட்ட செட்டியார் தம்மையும், இம்மையினும் மறு மையினுந் துன்பப் படுகுழியில் வீழ்த்தத் தக்க பெரும் புரட்டாமே யிது. 'புலந்தரு நூலி னில்லாப் பொருளினைக் கூறுவானும்' அவனைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடுவானும், மிக்க இழிந்த குலத்தவ ராவா ரென்று முன் னோர் நூல் பல முறையிடுகின்றன. இது பற்றியே 'நலத்தின்கண் ணாரி ன்மை தோன்றினவனைக், குலத்தின்க ணையப் படும்' என்ற பொய்யா மொழியு மெழுந்தது. நீரோ தந வைசிய ரெனப் பெயர்கட்டிக்கொண்டு வெளிவந்திருக்கிறீர். 'அரச மரத்தைப் பிடித்த சனியன் பிள்ளையாரையும் பிடித்தது' என்னும் பழ மொழிக்கு உமது தலைவிதி யிலக்கானதைக் குறி த்து விசனிக்கின்றேம். புரட்டுந் திருட்டும் யாரிடத்துள்ளன என இதனா லேனுந் தெரிந்துகொண்டீரா? இவ்வாறே உமது செட்டியாரது புரட்டுக் களை யெல்லாந் திரட்டி எழுதப்புகின் அது பெரும் புராணமாக விரியுமே.

தூர்வை யாசகப் படல மென்ற நூலில் உமது சற்குண சிகாமணி யாகிய செட்டியார் செய் துள்ள புரட்டுகள் பலவற்றையும் 'தூர்வை யாசகப் படல ஆராய்ச்சி' என்று எம்மால் வெளிப் படுத்தப் பட்டிருக்கும் நூலினைப் பெற்று, நடுநிலையின் னாராய்ந் தறிந்து, 'இவ்வாறு புரட்டு நூற் களை வெளியிட்டு நமது மதத்தை வளர்த்தல் ஒரு பிழைப்பாமா?' என்று நீர் புகழத் தலையிட்ட செட்டியாருக் கிடித் துரைத்து, இனியேனும் பெரி யாரை யிகழத் தலை நீட்டாது பெட்டிப்பாம் பென அடங்கி யொழுகுவீ ராக!

ஓ! கசடறக் கற்றவரே! பெயர் எழுதத் தெரியா தென்ற எமக்கு, அத னைக் கசடற வெழுதுவ திவ்வாறென் றாயினும் விளக்கினீரா ? 'விரட்டு' என்ற சொல், நமது நகரங்களில், 'மஞ்சு விரட்டு' என்று சிறுவர்களும் வழங்கக் காணும்படி யிருக்க, அஃதொரு தமிழ்ச் சொல் லன்று என்று புரட்டுகிறீரே! அதனால் நீர் சொற்புரட்டர் என்னும் பட்டஞ் சூடப் பார்க் கிறீர். இதனைப் பற்றி விரிக்க இப்பத்திரிகை யிடந்தரா தாதலின் பின் னொருமுறை விவகரிப்பாம். எமது கல்வி யறிவையும், நுமது செட்டி யார் கல்வி யறிவையும் பற்றி, உம்மூர்க் கும்பாபிஷேகப் பத்திரிகை வர லாற்றை மகா-௱-௱-ஸ்ரீ உமது நகரவைசிய பிரபுக்கள் கூறக் கேட்டு நன்கு தெளிவீராக? உண்மை யுணராது பக்க வாதங் கொண்டு நீர் சிற்றறிவின் மேலீட்டால் எம்மைத் தூற்றிய பல வசைமொழித் திமிரம் இவ் வுண்மை விளக்கத்தாற் றிசைகெட் டோடு மெனத் தெரிந் தடங்குவீராக!

நகர வைசிய பிரபுக்களே! நம்மவர்கள் இன்றும் நியமமாகப் பாராயண ஞ் செய்து வரும், நமது ஆண்டவர் சுவாநுபவத் திரு வாக்கையே இவ் வாறு புரட்டி யெழுதி யச்சிட்டு வெளியிடத் துணிந்த இந்தச் சொக்க லிங் கச் செட்டியாரது வஞ்ச நெஞ்சங் கொஞ்சமும் அஞ்சுமா, பன்னெடுங் காலத்துக்கு முன் னிருந்த சநக மகா ராஜா முதலிய பெரியோர் கொள்கை யைப் புரட்டிக் கூறுவதற்கு? இதனை நீங்களே உற்று நோக்கி இவர்களுக் குச் சற்புத்திகூறுவீர்க ளெனக் கருதுகிறேம்.

இங்ஙனம்,

காரியதரிசி,

☞ பிரஹ்ம வித்தியாப் பிரசாரண சபை,
கோவிலூர்.

காளயுக்திஸு
வைகாசிமீ 1௨

உ

சிவ மயம்.

ஒரு சற் காரிய தரிசியின்

## மதவாத வலிப்பின்

# திமிர்ப்பை யடக்குந் தண்டம்.

அறிவிற் சிறந்த பெரியோர்களே !

நமது நாட்டிலுள்ள கோவிலூர் மடாலயமானது பிரம ஞானப் பெரு வள்ளலாகிய ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞான தேசிக சுவாமிக ளவர்களால் சென்ற நூற்றாண்டில் ஸ்தாபிக்கப் பெற்று, அத் திரு வருளாளர் கட்டளை யின் வண்ணமே இந் நாள் வரை அவரது அடியார்களாற் செவ்வனே பரி பாலிக்கப் பெற்றுச் செழித் தோங்கி விளங்குகின்ற தென்பது உலக மறி ந்த விஷயமே யாம். தற்காலம் அம் மடாலயக் கருத்தாய் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞாந தேசிக சுவாமிகள் வித்தியாபிவிருத்தி செய் யின் பலவித நன்மை பயப்பதாகும் எனத் திருவுளங் கொண்டு,ஜீவ கருணை மேலீட்டால் சென்ற பிரமாதீச ஸூ ஸ்ரீ ஆண்டவர் குருபூஜா சுப திநத் தன்று 'பிரம வித்தியாப் பிரசாரண சபை' என்னும் பெயருடன் ஒரு சபை யை ஸ்தாபித்து, பல வூரி லிருந்தும் பல பண்டிதர்களை வர வழைத்து, அநேக அரிய பெரிய வித்தியா விஷயங்களை யுபந்யசிக்கச் செய்து, அவர் களை யாதரித்து வருகின்றார்க ளென்பதும் யாவரும் உணர்ந்த விஷயமாம்.

இஃதிவ் வண்ணம் பிரஸித்தமா யிருக்க, காரைக்குடி ராம. சொ. சொக்க லிங்கச் செட்டியா ரென்பவர், கோவிலூரையும், அதில் நடை பெறுஞ் சபையையும், அச்சபை சம்பந்தமான பிறவற்றையும் அறியாதவர் போல், "கோவிலூர் உபந்யாசப் பத்திரிகையின் மேற் கேள்வி" என்று ஒரு வியாச மெழுதி, பலவித மாறுபட்ட கையெழுத்துடன் பத்திரிகையில் வெளியிட்டார். அப்புரட் டுரையைக் கண்ட ஷை சபைக் காரிய தரிசியார், "புரட்டுக் கடாவை விரட்டும் விடை" என்ற பெயரை யுடைய ஒரு தனிப் பத்திரிகையை வெளியிட்டார். அந்த அதி கம்பீர விடையா லறை யப்பட்டுப் பல விடத்துங் குத்துண்டு, பல்லோராலும் மொத்துண்டு, மந மழுங்கி யயர்ந்து, இருக்கு மிடந் தெரியாது பதுங்கிக் கிடந்த அப் புரட் டுக் கடா, தற் சூழ்ந்த வருக்கும் தனது புரட்டுத் தொழிலைக் கற்பிக்குங் கருத்தை யுட்கொண்டு, "சற் காரிய தரிசி" என்ற வோர் சாமானியனை வெளிக் கிழுத்து விட்டது. இது விந்தையினும் விந்தையே யாம். அச் செட்டியாருக்குப் பீடித்திருந்த மத வாத வலிப்பு, இச் சற் காரிய தரிசிக் கும் ஒட்டிக்கொண்டமையால், அத் துர்நோய்களைத் தவிடு பொடியாக்கும் பரம ஔஷத மெனப் பெரியோர்க ளநுபவித்துக் கைகண்ட இந்தத் தண்

டச் சாற்றில், இந்தச் சற்காரிய தரிசிக்குங் கொஞ்சங் கொடுத்து, அவ்வலிப்பா லுண்டாகிய இவாது திமிர்ப்பை யடக்கி, விஷயத்தை விளக்குவாம்.

ஓ ! சற்காரிய தரிசியாரே ! நீவிர் விளக்கினவை யாவும் பலவித வசையாகிய அசத் காரியமா யிருக்க, உமக்குச் சற்காரிய தரிசி யென்னும் பெயர் எவ்வாறு பொருந்தும்? ஆதலால், நீவிர் அப்பெயரைப் பெற்று வந்தது, கண் ணில்லாதவர் பொன்னாம் பூண்டு வந்தமை போலாம். ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார் " காரைத் திராவிடன் " என்னும் பெயரை யொட்டிக் கொண்டு வெளி வந்தது, பத்திராதிபர் குற்றமே யொழிய, செட்டியார் சம்மத மன்று என்று புரட்டத் தலைப்பட்டீர். நுமது பொய்யுரை மிக நன்று நன்று. நீவிர் குறித்த பத்திராதிபர்களது திருக் காத்தாலேயே அவாது அச்சுவாகநத்தில் மூன்று திநம் வரையி லலங்கரிக்கப் பெற்று அவ்விடை வெளிப்பட்ட தென்று காணப்படுகிறது. நீர் சொல்வதுண்மையானால், அப்பத்திராதிப ரதனை வெளிக் கிளம்பாது தடுத்தல் வேண்டுமே. அல்லது, அது வெளி வந்த விற்றை நாள் வரையில் ஏன் அவர் அதைத் தடுக்க வில்லை? தம் குற்றமாயின், நீர் சொல்லியபடி, தாமே செய்ய முன்வந் திருப்பர். ஆகையால், செட்டியாரது புரட்டுத் தொழிலைப் பத்திராதிபர் மே லேற்றிக் கூறுவது பேதைமை யன்றி வே றன்று. கரும்பு கசப்பது கரும்பின் குற்ற மென்று கருதுவதோ டொக்கும் நுமது புல்லுரை. அடங்குக!

"அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு மாற்ற லின்றி" என்றீர். அவர் என்ற சுட்டு யாரைச் சுட்டியது. பத்திராதிபரையா? அல்லது செட்டியாரையா? நுமது வசநத்தாலும் கேள்விக் குரியவர் வெளிப்படாதொழியவே, அது விடையிறுக்கப் படுவ துண்டோ? அத்தகைய அக்கேள்வி "அறிவு அறியாமை......" என்று வகுக்கப்பட்ட அறு வகை வினுக்களு ளடங்காது, ஆபாசமாய் விளங்கியதால், அதற் கேற்ற விடையாற்ருக்கப்பட்டு முறிபட்டது. காரிய தரிசியின் பத்திரிகை வச வென்றீர். நுமது செட்டியாரது புரட்டுக் கடாத்தான் "சூரியனே பொந்துக்குள் நுழைந்து விட்டான். வெளியில்வா வழிதெரிய வில்லை யென் றிரங்கி, அதற்காக வெளிச்சங் காட்டுகிறவர்கள் சாஸ்திரிகளும் சாதுக்களுமாக, காட்டுவிக்கிறவர்கள் தாங்களுமா யல்லவோ முடிந்தீர்கள்" என்று பெரும் வசவைச் சுமந்து வந்த தெனவும், காரியதரிசியின் விடை அக் கடாவுக்கு உள்ள வாறே யறைந்த தெனவும் உலக மறியும். இன்னும், "நுமது செட்டியார் சற் காரியங்களிலேயே தமது கருத்தைச் செலுத்துபவர்" என்று விளக்கு மாற்றை மேற் கொண்டீர். அவருக்கு இராப்பகல் வேதாந்திகளை மாயா வாதி யென்று சொல்லவும், ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர் ஓர் நல்லாசிரிய ரன்று, சாமானிய மனிதரே யென்று ஸ்தாபிக்கவும், கோயிலூர் மடாலய சாதுக்களிடம் நகர வைசிய பிரபுக்கள் கொண்ட பக்தியை



எந்த விதங் கெடுப்ப தென்று முயற்சிக்கவும், எழுதவும், அச்சிடப் பொருள் சேகரிக்கவும், வெளியிடவுந் தான் காலம் போதா திருக்கிறதே, சிவ நாமத்தை ஒருதரம் நினைக்கவேனும் அவாது மநத்திற் கோய்வுண்டா? அவாது செயலே யாவருக்கும் அவாது சற் காரியம் விளங்கும்படி வெளியாக்கிவிடுகிறது. நூற் புரட்டு, மதப் புரட்டு, மதாசாரியர் புரட்டு, சரித்திரப் புரட்டு, புராணப் புரட்டு முதலிய புரட்டுக் குப்பைகள் தாம் நுமது செட்டியாரிடம் மலிந்து காணப்படுகின்றனவே யொழிய, வேறொரு சற்காரியம் கடுகளவுங் காணப்பட வில்லை யென்பது இப்பொழுது இந்நாட்டிலியாவருக்கும் விளக்க மாயிற்றே. நுமது செட்டியாரது புரட்டுத் தொழிலை அவரும் நீரும் ஒப்புமாறு, பற்பல பத்ரிகைகளும் புத்தகங்களும் உலகத்தில் நிதர்சநமாக விளக்கிக் கொண்டிருக்க, அவாது காரியத்தை யறிய எங்குங் கண்ணுடைய விறைவன் வேண்டுமென்றீரே. நுமது பகட்டுரையும் புரட்டுரையும் மிக நன்று! நன்று!!

"வையும் பூசல்" என்றீர். நுமது செட்டியாரே, வையும் பூசலை முதலில் வருந்திச் செய்தன ரென, அவாது புரட்டுக் கடாவும், பொய்ந் நூல்களுந் தெளிவாய்ப் புலப்படுத்தும். " ஆடு கோழிகள் மயிர் சிலிர்த்தல் போல்" என்றீர். அவ்வாறு மயிர் சிலிர்த்துக் கொண்டு பலிக்கு முன் வந்தது, நுமது செட்டியாரது புரட்டுக் கடாவே யென வுண்மை தெளிந் தடங்குக! நுமது செட்டியாருடன் இது விஷயமாய் வியாச்சியங் தொடுக்க, அவாது புரட்டுப் பொருளே மிகுதியாக விருக்கக் கோவிலூர் மடாலயப் பொருள் எற்றுக்கு? அமைக!

ஓ சற்காரிய தரிசியாரே! இத் தண்டத்தாற் ருக்குண்டும் நுமது மதவாத வலிப்புத் தீராது, மேலுந் திமிர் வாதஞ் சேட்டிக்குமேல், எம்மவர் சூட்டுக்கோல் கொண்டு தீய்க்கும் சூட்டை யேனும் பெற்றுச் சுக முறுவீராக! "இன்னும் ஏன் துள்ளுகிறீர்" என்றீர். துள்ளி வந் தெதிர்த்தது முதலில், நுமது செட்டியாரது புரட்டுக் கடாவே யென்பதும், அதன் றுள்ளல் காரிய தரிசியின் விடையால் அறையப்பட் டடங்கிய தென்பதும் அன்பர்க ளறிந்தனவேயாம். " தன்வினை தன்னைச் சுடும் " என்றீர். நுமது செட்டியார் செய்த உலக விரோதப் புரட்டு வினையும், நுமது முரட்டு வினையும், உங்களையே பற்றிச் சுட்டன வென் றுலக மறியும் என, வுண்மை யுணர்ந் தடங்கி யொருவழி நிற்பீராக ! இனி இத்தகைய வாபாசவுரை கொண்டு வெளி வரத் துணிந்து அவமாநத்திற் காளாகாது அடங்கி யொழுகுவீராக !

☞ ஞான பண்டிதன்.

கணபதி துணை.

சற் குருப்யோ நம:

# நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்கு
# ஓர் விஞ்ஞாபநம்.

---

வா யுறை வாழ்த்து.

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.

**நகர வைசிய நண்பர்காள்!**

காரைக்குடி ராம. சொ. சொக்க லிங்கச் செட்டியா ரென்பார், சோம
சுந்தர மாலை, வேதாந்தம் முதலிய சிற் சில சிறு புத்தகங்களையும், உண்மை
யுரைப்போன், நல் லொழுக்க நயந்தோன், சத்திய வாக்கி,சற் காரிய தரிசி,
உலோகோபகாரி, முதலிய மறு பெயர்களைக் காட்டி சிற் சில துண்டுப் பத்
திரிகைகளையும், அச்சிட்டு வெளியிட்டு, வேதத்தையும், வேதாந்தத்தையும்,
அவ்வழி யொழுகும் கோவிலூர் மடாலய சாதுக்களையும், ஸ்ரீ சங்கராசாரிய
சுவாமிகளையும், விஷ்ணு மூர்த்தியையும், பற் பல வாறு நிந்தித்துச் சாமா
னிய படிப்புள்ள சில தந வணிகரை யேமாற்றிக் காலங் கழித்து வருகிறார்
என்பது, இந்நாட்டில் யாவரும் அறிந்த விஷயமேயாம்.

இவை யெல்லாம் இவ்வா றிருக்க, காரைக்குடியி லிருந்து வெளிவரும்
பிங்களஸு மார்கழிமீ மனோ ரஞ்சனிப் பத்திரிகையில், "கோவிலூர் உப
ந்நியாசப் பத்திரிகையின் மேல் கேள்வி" என்ற ஒரு வியாசம் வெளி
யிட்டு, "காரைத் திராவிடன்"என்னும் மறு பெயரை யொட்டிக் கொண்டு
வெளிவந்தார். அவ்வாறு வெளிவந்த அவாது கடாவானது, புரட்டுக் கடா
வாகு மென்று தக்க பிரமாணங் கொண்டு, அச்சபைக் காரியதரிசியால் பல
வாறு நிரூபிக்கப் பெற்று, விரட்டப் பட்டு அடியற் றொழிந்தது. இப்பொ
ழுது மேற்படி "பிரஹ்ம வித்தியாப் பிரசாரண சபை" பதினோரு திநம்
வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

வேதாகம புராணேதிகாசாதி சகல சாஸ்திரங்களையுங் கரைகண் டுணர்
ந்த ஷை சொ. செட்டியார், அச்சபையை யடைந்து, தமது வினாக்களை
வினவி விடை பெற வேண்டியது முக்கிய கடமை யன்றோ? எனெனில்,
"ஐய மிருப்பவர்க்ள் வந்து கேட்கும் சாஸ்திர விஷயமான கேள்வி
களுக்குத் தக்க உத்தரங் கூறப்படும்" என்று அச்சபைக் காரியதரிசியார்
உபந்யாசப் பத்திரிகையில் பகிரங்கமாய் வெளியிட்டிருத்தலின்,—இது சம
யம் ஷை செட்டியார் வெளியூரில் மறைந்து வசிப்பதாகப் புலப்படுகிறது.



இஃதென்ன விநோதம்? நீங்களே யூகித் துணருங்கள். சபை நிறை வேறி,
உபந்யாசகர்கள் தங்க டங்கள் ஊருக்குச் சென்ற வுடன், ஷை செட்டியார்
தமது ஊரை யடைந்து "வேதம் பசு நூல் வேதாந்தம் மாயா வாதம். அவ்
வழி யொழுகும் கோவிலூர் மடாலய சாதுக்கள் மாயா வாதிகள். ஜகத்
குருவாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் சாமானிய மனிதருள் ஒருவர்.
அவர் ஈஶ்வா அவதார மன்று. அவர் நீல கண்ட சிவாசாரிய ரிடத்துச்
சைவ தீக்ஷை பெற்று சைவ சித்தாந்தியாய் வாழ்ந்தவர். விஷ்ணு மூர்த்தி
நம் போன்ற சீவர்களில் ஒருவர். அவர் கடவுள ரல்லர். அவருக்குக்
கோயில் கட்டுவோர் நாகத்தை யடைவர்." என்று இத்தகைய பகட்டு
மொழிகளைப் படிப் பில்லாதவ ரிடத்துப் பகட்டித் தன்னைச் சர்வ சாஸ்தி
ரப் பண்டிதராகப் பாவித்து இறுமாந்து காலங் கழிப்பார். இஃதெவ்வளவு
அறியாமை பாருங்கள்.

"காணுமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணுமல் வாய்திறக்கக் கூடாதே—நாணுமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி"

என்று நமது ஔவைப் பிராட்டியார் அருளிய நீதி இவருக்கே யடுத்தது.
ஆண்மைக் குண முடையோருக்கு இஃதடுத்த செய்கையாமா?

ஷை செட்டியாரிடத்து அபிமாநங் கொண்டு, அவாது வீண் மொழி
களை வேத மொழியாகக் கருதி, அவரைத் தலையிற் றூக்கிக் கொண்டு கூத்
தாடும் பிரபுக்களும், அவ ரெழுதும் புரட்டுப் புத்தகங்களை யச்சிட்டு வெளி
யிட முன்வரும் புண்ணிய சீலர்களும், இப் பத்திரிகையைக் கண்டாயினும்,
"ஓ! சுத்தாத்வைத சைவ சித்தாந்தப் பழமே! சர்வ சாஸ்திர சாகரமே! எங்
களை யடிமை கொள்ளக் காரைமா நகரின் கண் அவதரித் தருளிய கற்பக
மே! இது சமயம், கச்சிக்குங் கொச்சிக்குங், காட் டேருக்குங் கோட் டேருக்
கும், ஆச்சா புரத்திற்கும் அரி மழத்திற்கும், கொத்த மங்கலத்திற்கும்,கும்ப
கோணத்திற்கும், தேவரீர் கம்பி நீட்டத் தலைப்படுதல் தரும மாமா? நீதி
யாமா? நன்று நன்று நுமது செய்கை. புறப்படுக! புறப்படுக! கோவிலூரு
க்கு இது தருணம் புறப்படுக! ஆண்டு ஆடிப் பூர மகோற்சவமும், அத்து
வித மகாசபையும், அதிவிமரிசையாக நடைபெறுகின்றன. வேதம் பசு
நூல் என்பதற்கும், வேதாந்தம் மாயா வாதம் என்பதற்கும், அவ்வழி யொ
ழுகும் கோவிலூர் சாதுக்கள் மாயா வாதிக ளென்பதற்கும், அவர்களது
ஆண்டவராகிய ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிக சுவாமிகள் "நாம் பிர
மம் என்று சொல்லி நண்ணி யுழலாதே" என்று தம்மைச் சார்ந்தவர்
களுக்கு உபதேசித்து வந்தார்கள் என்பதற்கும், அவ்வாசிரியப் பெருந்
தகையார் துவித ஞாநங் கொண் டொழுகிய சைவ சித்தாந்தி யென்பதற்
கும், மகான்களைச் சமாதி செய்யாது காலிற் புரி கட்டி யிழுத்து நாய்நரிகள்
தின்னு மாறு காற் சந்தியிற் போட வேண்டு மென்பதற்கும், ஜகத் குரு

வாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் நீல கண்ட சிவாசாரியரிடத்து சைவ தீக்ஷை பெற்று சைவ சித்தாந்தியாய் வாழ்ந்தார் என்பதற்கும், அவர் போலவே நாரதர், வியாசர், சநகமகா ராஜன் முதலிய பெரியோர்கள் துவித ஞானங் கொண் டொழுகிய சைவ சித்தாந்திக ளென்பதற்கும் ஆதாரமான சுருதி மிருதி புராண இதிகாசாதி சாஸ்திரங்களை மூட்டை கட்டித் தலையிற் றூக்கிக் கொண்டு தேவரீருக்குத் தேசிகரா யுள்ள நாவலர் பெருமான்களையும், மற்று மிந்நாட்டிலுள்ள மகான்களையும், துணையாகக் கூட்டிக் கொண்டு போவோம் புறப்படுங்கள். கோவிலூருக்குப் போவோம் புறப்படுங்கள்'' என் றுரைத்து அச் செட்டியாரை யழைத்துக்கொண்டு, அச்சபையை யடைந்து, பல நாளாய் வெளியிட்டுவரும் அவரது பகட்டுக் கொள்கைகளை நிலைநாட்டினால், என் போன்றவர்கள் செட்டியார் கூறும் நெறியின் உண்மை யுணர்ந்து அவ்வழி ஒழுகப் பேருபகாரமாகும். அவ்வாறின்றி, ௸ சபை நடைபெறுங் காலையில், மிகுந்த பக்தியாளர் போல் ஸ்தலயாத்திரைக்குப் புறப்பட்டு விட்டு, பின்பு வந்து கல்லா மாந்தரிடத்துங் கைம் பெண்களிடத்தும், காக்கை கரைவதுபோல் கத்துகின்ற இவரது சைவ சித்தாந்தத்தாற் பயன் பெறுவார் யாவர்? வீண் புலம்பலேயன்றி வே றின்றே.

இதனைக் கண்ணுறும் நகர வைசிய பிரபுக்கள், இவ்வாறு ஊ ரூராயோடி யொளிகின்ற மேற்படி செட்டியார், தமது போலி மதக் கொள்கைகளை யுலகத்தில் இனி மேல் வெளியிடுதல் தகா தென்று அவருக்கு உள்ளவாறு அறைந்து அவரது புரட்டு நாவையும் கையையும் அடக்கி வைப்பார்களெனக் கருதுகிறேன்.

மேற் கூறியாங்கு அச்செட்டியார் செய்யாது, பின்னும் பத்திரிகை வாயிலாய்ப் புலம்புவாராயின், அதனை அச்சபையார் ஒரு பொருட்படுத்தாது ஒதுக்கிக் கழிப்பார்களெனத் தோன்றுகின்றது.

உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

இங்ஙனம்,

☞ சித. கரு. ராம. சிவ கிரிச் செட்டி.

உ

சிவ மயம்.

காரைக்குடி

அறு பத்து மூவர் மடச் சொக்க லிங்கச் செட்டியார்
வேதாந்திகட்கு அஞ்சி யோடியதும்
## அதன் பொருட்டு உபந்நியாசமும்.

கோவிலூர் உற்சவத்தில் பதினொரு திநம் வித்வ சிகாமணிகளால் உபந்நியாசங்கள் நடை பெற்ற போது அவரும் அவரைச் சார்ந்தாரும் அங்கு வந்து தமது அவைதிக பக்ஷத்தை நிலை நிறுத்து மாற்ற லின்றித் தம் மூரிலு மிராது பயந்து ஓடிவிட்டனர்.

அங்ஙனஞ் செய்தாராயினும், அவர் மீது அத்வைதிகள் கருணை கூர்ந்து அவர் வசிக்கும் காரைக்குடி அறு பத்து மூவர் மடத்தில் காளயுக்தி௵ ஆடி௴ 28௳ திங்கட் கிழமை மாலை 4-மணி முதல் 9-மணி வரை நியாய சந்திரரும் வேதாந்த பாஸ்காரும் ஆகிய ஸ்ரீ சுப்பைய ஸ்வாமிக ளவர்களின் அக்ராசனத்தின் கீழ் ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிகள், ஸ்ரீ சிவ ராம லிங்க ஸ்வாமிகள் முதலிய சந்நியாசிகளால், சிவ தத்துவ விசார முதலிய விஷயங்கள் உபந்நியசிக்கப்படும்.

ஆண்டு இவரும் இவரைச் சார்ந்தாரும் ஏனைய பக்த சிகாமணிகளும் வந்து சிரவணித்து அவ்வா றொழுகுக.

☞ அத்வைதி.

உ

சிவ மயம்.

" உண்மை உரைப்போன் " "நல்லொழுக்கம் நயந்தோன்" என்ற

## துராசாரர்க்குச் சிக்ஷை.

[சொக்க லிங்கச் செட்டியாரின் த்வாதச மகிமை.]

" பொய் யுரை மறுப்பு " " உள்ளபடி அறைதல்" என்று பெயர் புனைந்து இரண்டு பத்திரிகைகளை வெளியிட்ட துராசாரரே ! நீவிர் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் பாத ஸ்பரிச முற்றமையால் பவித்திர மடைந்த கங்கையினைச் சிரசில் தரிக்கின்றமையின் பரமேஸ்வரனுக்கு மஹிமை யுண்டாயிற் றென்று ஒருவர் கூறினால், அதனை நிந்தையென்று கொள்ளாது

துதி யென்று கொள்ளல் வேண்டும்; அங்ஙன மன்றா பாகவதாதி கூறு வனவும்? அதற்கு மாறாய் நிந்தையென மருண்டு நிலை குலைவானேன்?

"அவர்க ளெல்லாம் செட்டியா ரவர்க ளுடைய யதார்த்த நிலையை உள்ளபடி தெரிந்தவர்க ளாதலால்" என்கின்றீர். நகரத்தார்கள் சொக்க லிங்கச் செட்டியாரின் தன்மையினைப் பிறந்தது முதல் இன்றளவும் அறிந் தவர்களாகலி னன்றோ தாயுமான ஸ்வாமிகள் "கற்று மறி வில்லாத" என்று கூறியாங்குப் "படித்துக் கெட்டவர்" என்று கூறுகின்றார்கள். 'நகரத்தார்கள் எம்மிடத்து விரோதிப்பார்கள்' என்று எழுதி யிருக்கின் றீர். நகரத்தார்கள் எம்மிடத்து விரோதிக்கின்றார்களா? அல்லது, அறு பத்து மூவர் மடச் சொக்க லிங்கச் செட்டியாரிடத்து இரு வழக்காலும் விரோதிக்கின்றார்களா? வென்பதனை இனியேனும் காரைமா நகரிற் பல் லோர்வாய்க் கேட் டுணர்வீராக.

"இவர் செட்டியா ரவர்களது மகிமை சிறிதுந் தெறிந்தில ராதலாற் சிறிது காட்டுவோம்" என்று எழுதுகின்றீர். செட்டியா ரவர்கள் மகிமை யாவன:—(1) அவர் குடியிருந்த வீடு மெசெ வகையறா-பழநியப்ப செட்டி யாரால் ஏலம் போடப் பட்டது. (2) அவர் சம்சார மின்றி விதுராச்சிர மத்தி லிருப்பது. (3) சிருங்ககிரி ஜகத் குரு ஸ்ரீலஸ்ரீ சச்சிதாநந்த சிவா பிநவ நர சிஹ்ம பாரதி ஸ்வாமிக ளவர்களைச் சிவாலயத்துட் செல்லல் கூடா தென்று நிந்தித்த பாபத்தால் அவர் புத்திரன் ராம நாதன் (திரு நாவுக் கரசு) சம்சாரம் இறந்தது. (4) அவர் தம்முடைய வர்ணாச்சிரம தருமத்திற்கு விரோதமாக நிந்தாப் புத்தகங்களை அச்சிட வைசியப் பிரபுக்க ளிடத்து யாசித்தல். (5) அவர் தம் புத்திரனது விவாக நிமித்தம் பல்லோ ரிடத்தும் யாசகஞ் செய்ய முயலுதல். (6) அவர் ஆச்சாபுரத்தில் அந்நிய ருடைய அந்நத்திற்கு வாசஞ் செய்தல். (7) அவர் கொத்த மங்கலத்தில் ஊருக்கு மேற்புற மடத்துக்குச் சமீபமா யுள்ள விக்நேஸ்வராலயத்தின் முன் பாத ரக்ஷையாகிய வாஹநத்தின்மீது நிற்கும் ஈழத்துச் சிட்டாசார முடையவ ராதல். (8) நீத்தாரை நிந்தித்தல். (9) அவர் பந்து வர்க்கத்தா ரோடு கூட்டுற வின்மை. (10) மேலைச் சிவபுரியில் அக்கிராசநம் வஹிக் கச் சென்ற காலத்து வடலூர் ராம லிங்க ஸ்வாமிகள் அருட்பாவால் வந்த பெருமை. (11) இவர் எழுதி யனுப்பிய நிந்தா வியாசங்களை அக்கிராச னாதிபதி படித்தல் கூடா தென்ற பெருமை (12) வைசிய மித்திரன் பத் திரிகைக்கு எழுதிய நிந்தா வியாசங்கள் வெளியிடப் படாதுபோன பெரு மை முதலியனவாம். இவை யாவையும் யாம் நன்குணர்ந் திருக்கின்றோம். நீவிர் உணராதிருக்கின், தேதி மாதங்களோடு மறு முறை வெளியிடுவோம். இவை போன்ற மஹிமைகளை விரிவஞ்சி எழுதாது விடுத்தாம்.

"செட்டியா ரவர்களது லோகப் பிரசித்த மஹிமையை" என்கின் றீர். லோகப் பிரசித்த மென்றால், ஸ்வர்க்க மத்திய பாதாள மென்னும் மூன்று லோகப் பிரசித்தமா? அல்லது, பூலோகப் பிரசித்தமா? பூலோகத்



திலும் பல சில்லாக்களிற் பிரசித்தமா? பல சில்லாக்களிலும் எந்தச் சில் லாவிற் பிரசித்தம்? மதுரைச் சில்லாக் காரைக்குடியில் "படித்தும் தெரி யாத", "படித்துக் கெட்ட", "நிந்திக்கின்ற", "வைகின்ற" அறு பத்து மூவர் மடச் சொக்க லிங்கய்யா வென்பது பிரசித்தம். இவ்வாறுள்ள பிரசித்தியை மறைக்க நாம் முயலுதல் ஒவ்வாததே யாம்.

"நாவில் புழுப் புழுத்துச் சாவான்" என்று ஒரு மஹாத்மாவினது சாபத்தினையு மேற்ற சொக்க லிங்கச் செட்டியாரின் துர்ப்பாக்கியத்தினைக் கூறுவதில் பய னின் றென விடுத்தாம்.

தூர்வை யாசகப் படலம் முன்னரே வசந ரூப மாக விருக்க, இப்பொ ழுது வசந மாக்கினதாகப் பொய் புகலுகின்றார். விரிப்பில் விரியும் அமைக.

☞ துவைத சைவ துர்வாத கோளரி.

உ

சிவ மயம்.

## நன்மதி கூறல்.

அறு பத்து மூன்று நாயன்மாரை நிந்திப்பருவம்,
ஆதி சைவர் (குருக்)களை நிந்திப்பவரும், சமயாசாரியர்
முதலியோர் குலத்தினை நிந்திப்பவரும், ஆகிய காரைக்குடி
அறு பத்து மூவர் மடச் சோக்க லிங்கச் செட்டியாருக்கு
நன் மதி கூறல்.

---

1. அறிவிற்சிறந்த அன்பர்களே! காரைக்குடி அறு பத்து மூவர் மடத்தில் வசிக்கும் ராம. சொ. சொக்க லிங்கச் செட்டியா ரென்பார் காரைக்குடியில் உள்ள மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் சிவாலயத்துள் அறு பத்து மூன்று நாயன்மாரைப் பிரதிஷ்டை செய்தல் தகா தென்று, ஒரு வைசி யப் பெண் மணி விக்கிரங்களைப் பதினாயிரத்துக்கு மேற் பொருள் செலவு செய்து வார்த்தும் பூஜைக்கு மூலதநம் கொடுத்தும் இருக்க, பல இடை யூறுகள் செய்து வருகின்றார். ஆகலின், அவருக்கு நாயன்மார்களுள் நால் வர்கள் ஒழித் தொழிந்த எனையரிடத்துச் சிவ னடியார் என்னும் புத்தி யில்லை யென்பது விகசிதமாகின்றது. அதனால், நாயன்மார்களை நிந்திப்ப வரு மாகின்றார்.

2. இவர் ஆதி சைவர் (குருக்) களை, ஆதி சைவ குல மான்மியம் 7-வது பக்கத்தில் "ஆதி சைவர்கள் கூலிக்குப் பூசை செய்கின்றார்கள் கூலிப் பூசை இழிவு தரு மென்ப துண்மையே" என்றும் 16-வது பக்கத்தில் "இனிச் சிவப் பிராமணர்கள் தங்களுக்கு நான்கு படி கீழுள்ள பிராமணர்களை உபாத்தியாயர்களாகக் கொண்டு சிராத்தாதி சகல கிரியைகளைச் செய்வது விதி விரோத மெனத் தெளிந்து தாங்கள் எல்லோரும் வேத சிவாகமாதி நூல்களை நன் குணர்ந்து தாங்களே செய்து கொள்ளாமற் பாராமுகமா யிருப்பது என்ன தலைவிதியோ இது அறியாமைக் குண மன்றி வே றில்லை" என்றும் இன்னும் பலவாறாகவும் எழுதி மூடர்க ளென்றும் தலைவிதிக் கென் செய்வ தென்றும் பிரஹ்மாவினிடத்து முறையிடுவது போற் பற்பல விதமாக நிந்திக்கின்றார். ஆகலின், சிவத் துரோகியுமாயினர்.

3. உமாபதி சிவாசாரியர் நாயன்மார்கள் சாதியை வகுக்குங் காலத்து முதலில் வைதிக பிராஹ்மணர் குலத்தினையும், பின் ஆதி சைவர் குலத்தினையும், வகுத் திருப்பவும், சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் "தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" என்று கூறி யிருப்பவும், ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள், ஸ்ரீ ஞான சம்பந்த ஸ்வாமிகள், ஸ்ரீ உமாபதி சிவாசாரிய ஸ்வாமிகள், ஸ்ரீ ஹர தத்த சிவாசாரியர், ஸ்ரீ நீல கண்ட சிவாசாரியர், ஸ்ரீ அப்பய்ய தீக்ஷித யோகீந்திரர் முதல் அள விறந்த பெரியோர்கள் வைதிகப் பிராஹ்மண குலத்தி லவதரித் திருப்பவும், அவற்றினை யுணரும் உணர்விலாது, குருக்களுக்கு நான்குபடி தாழ்ந்தவர்க ளென்றும் வைசியர்க ளென்றும் பிரஹ்மாவினையே பூஜிக்கத் தகுதியுடையோர்க ளென்றும், ஜாதிப் பிரஷ்டர்களென்றும் இன்னும் பலவாறு பிராஹ்மண குலத்தினை இவர் நிந்திக்கின்றமையின், பிராஹ்மண குலத் துவேஷியும், குரு குலத் துவேஷியும், குருத் துவேஷியுமாகின்றனர்.

இவர் சதாசிவ முகோத்பன்னரா? பிரஹ்மா முகோத்பன்னரா? பிரஹ்மா முகோத்பன்னராயின், இனிப் பிரஹ்மா வினையே அகோராத்திரம் பூஜனை புரிவாராக சிவனைப் பூஜியா திருப்பாராக.

இன்னும் தன் புத்திரனுக்கு விவாஹத்தின் பொருட்டுப் பெண் கொடுக்கும் பிதா மாதாக்களை தம்வசமாக வேண்டு மென்னும் கருத்துடன் மாந்திரிகனைக் கொணர்ந்து மந்திரங்கள் ஓதுவிக்கின்றார்.

இவ்வாறு, சிவ துரோகியும், சிவ னடியார் துரோகியும், சிவ குருத் துரோகியும், சிவ குரு குலத் துரோகியும், சிவப் பிராஹ்மணத் துரோகியுமாய்ப் பஞ்சத் துரோகங்களைச் செயும் சொக்க லிங்கச் செட்டியாருக்கு அவரைச் சார்ந்த குருமார்களும், அவர் நண்பர்களும், அவர் மாணக்கர்களும், அவர் பந்து வர்க்கத்தாரும், ஒன்று கூடி இவ்வாறாய பஞ்ச நிந்தனைகளைச் செய்யாதி ரென்று திரு வள்ளுவ நாயனார் கூறியாங்கு குமட்டிலிடித்துக் கூறுவார்களாக.



சிருங்க கிரி ஸ்ரீலஸ்ரீ ஜகத் குரு சச்சிதாநந்த சிவாபிநவ நரசிம்ஹ பாரதி ஸ்வாமிகளிடத்தில் திருநெல்வேலி குறுக்குத் துறையில் ஆத்மார்த்த பூஜையின் பொருட்டு சிவ லிங்க முதலியவற்றைத் தீக்ஷையோடு ஸ்ரீ அம்பல வாண நாவல ஸ்வாமிகள் பெற்றுக் கொண் டிருக்கிறார்கள் இதனால், ஸ்ரீ உமாபதி சிவாசாரிய ஸ்வாமிகள், ஸ்ரீ ஆறு முக நாவல ரவர்கள், ஸ்ரீ அம்பல வாண நாவல ஸ்வாமிகள் முதலியோர்கட்கு வேதாந்தக் கொள்கையுடைய பெரியோர்களே குருமார்களாக இருந்திருக்கிறார்க ளென்றுணர்க.

வைசிய மித்திரன் பத்திரிகைக்கு வைசிய சிகாமணி யென்று கைச்சாத்திட்டு வியாச மனுப்பியவர் சென்னை லோகோபகாரி, சக்கிரவர்த்தினி முதலிய பத்திரிகையின் ஆசிரியராகிய கோ. வடி வேலு செட்டியா ரவர்கள் ஆகலின் ஸ்ரீலஸ்ரீ சுப்பைய ஸ்வாமிகள் எழுதியதாக மருண்டு எழுதாது நன்மை கடைப்பிடித் தொழுகுக.

அறு பத்து மூவர் மடத்தில் நடைபெறுவதாக இருந்த உபந்யாசத்தை இவரைச் சார்ந்த அநேகம் நகர வைசிய பிரபுக்கள் நிறுத்தி வைக்கும்படி கேட்டுக் கொண்டமையின் அவ்வாறு செய்யப்பட் டிருக்கின்றது.

இதுகாறும் ஓடி ஒளிந்தது போன்றே இனி நாவினை யடக்கிக் கொண்டு நன் மதியோடு இருக்கும்படி தெக்ஷிணா மூர்த்தியை யநுக்கிரகஞ் செய்யும்படி வேண்டிக் கொள்கின்றேன். விரிப்பிற் பெருகும்.

☞ அத்வைதி.

---

உ

சிவ மயம்.

மாயா வாதத் துவைத மலத் தடிப் பேறிய

**அசுத்த சைவ சித்தாந்திக் கோர்**

## * அறை.

---

சைவ சித்தாந்தியாரே!

"காரைக்குடி அறுபத்து மூவர் மடத்தில், பிரசங்கஞ் செய்வதாய்ப் பிரசுரித்துப் பின்னிட்ட அத்வைதிக்கு அறிவிப்பு" என்று பெயர் புனைந்து நிந்தை நிரம்பிய சிறு துண்டுப் பத்திரிகை யொன்றை நீவிர் வெளியிட்டிருக்கின்றீர்.

* முதனிலைத் தொழிற் பெயர்.

பிரசங்கஞ் செய்வதாய்ப் பிரசுரித்தபின் நடைபெருது நின்றமைக்குக் காரணம் யாவை யெனின்:—தேவி கோட்டை அரு. அரு. சோம. சோம சுந்தரஞ் செட்டியார், அழ. சுப. பழ. சுப்பைய செட்டியார், தி. அ. சு. சுப்பிர மணியஞ் செட்டியார், கீழை வீட்டுச் சுவாமிநாதன் செட்டியார் முதலியோர்கள், காரைக்குடி ஆவி. ப்ழ. சிதம்பரம் செட்டியார், அ. வீர. ராம சொக்க லிங்கச் செட்டியார், முதலியோர்கட்குக் கடித மெழுதி உபந்யாசத்தை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். இவர்களும், சி. முரு. முருகப்ப செட்டியார், மெ. பழ. லெட்சுமணன் செட்டியார், ராம. ப. மெ. சொக்க லிங்கச் செட்டியார் முதலியோர்களும், ஒருங்கு சேர்ந்து, பழ. வெ. ராம. ராம சாமி செட்டியாரிடம் போய் “தேவி கோட்டையி லிருந்து கடிதம் வந்திருக்கின்றமையின் யாங்க ளெல்லோருக்கும் நீங்கள் பிரதிநிதியாக விருந்து, அறு பத்து மூவர் மடத்தில் நடைபெறுவதா யிருக்கும் உபந்யாசத்தை, நடை பெருது நிறுத்தி வைக்கும்படி, கோவிலூர் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிக சுவாமிக ளவர்க ளிடத்தில் ஸ்ரீ சுப்பைய சுவாமிகள் முதலிய சந்நியாசிகளை உபந்யாசஞ் செய்யா திருக்கு மாறு ஆக்ஞாபிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ளல் தகுதியாம். இனி, ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரை, வேத நிந்தை, விஷ்ணு நிந்தை, விப்பிரர் நிந்தை, பெரியார் நிந்தை, சிவ நிந்தை, சிவ னடியார் நிந்தை முதலிய நிந்தைகளைச் செய்யா திருக்கு மாறு அடக்கி விடுகின்ரேம்” என்று கேட்டுக் கொண்டார்கள். அதன்மீது, அவர்கள் வாக்கியத்தைக் கடக்கொணுதவராய் ஸ்ரீ சுவாமிக ளவர்க ளிடத்தில் பிரார்த்தித்து நிறுத்தி வைக்கும்படியான ஏற்பாடுகள் செய்தார்.

இவ் விஷயத்தை, நன் மதி கூறல் என்னும் நோட்டீஸில் வெளியிட்டிருக்க, அதனை யுணராது பின்னிட்டதாகப் பிரசுரித்தீர். நுமது புரட்டைப் பல புத்தகங்களாலும், பல துண்டுப் பத்திரிகைகளாலும், நகரத்தார்களும், ஏனையோர்களும், உணர்ந்திருக்கின்றமையின், எம்மைப் பின்னிட்டவ ரென் றுணராது நும்மையே புரட்டுப் பத்திரிகை யச்சிடும் புரட்ட ரென் றுணர்வாராக.

“சிற்றறிவின் சிலு சிலுப்பாலும், அடங்காமையாகிய அந்தகார மறைப்பாலும்” என்று எழுதி யிருக்கின்றீர். காளி கோயில் முன் பலி கொடுக்கும் கார்நிறக் கடாக்கள் போன்று சிலு சிலுத்துக் கொண்டு,பலியாவதற்கு முன் வரும் சிற்றறிவினை யுடையவர் நீவிரே யென்றும், அடங்காமையாகிய அந்தகார மறைப்பு நும் மகத்தே குல தெய்வமாகக் குடிகொண் டிருக்கின்ற தென்றும், சின்னூளாக நும்மவர் பிரசுரிக்கும் புத்தகம் பத்திரிகை முதலியவற்ருலும், நீவிர் பிரசுரித்து நடைபெற விருக்கும் வாதப் போரினாலும் யாவரும் உணர்வர்.

“அடக்க முடைமையே யாபரணமாகப் பாலிய முதற் பூண்டொழுகும்” என்று செட்டியாரை வியந்தீர். முடைமை ‘யென்பது தரித்திரத்



தன்மை யென்ருகி ‘அடக்கத்தின் தரித்திரத் தன்மை’ எனப் பொருடந்து, பாலிய முதல் அடக்கம் இன்மையினையே யாபரணமாகப் பூண்டொழுகும் செட்டியா ரென்று, நகர வைசியப் பிரபுக்களும், யாமும், அவர் வெளியிடும் நிந்தாப் புத்தகம் பத்திரிகை முதலியவற்றை சாக்ஷியாகக் கொண்டு ஒப்பியவாறே நீவிரும் பத்திரிகை வாயிலாகச் செட்டியாரின் அடக்க மின்மைக் குணத்தினைப் பிரசுரித்தீர். அதனுல், நீவிர் சாலச் சிறந்தவரே யாவீர்.

“கீழே விழுந்தவன் மீசையில் மண்படடதா பார்” என்னும் உலக வழக்குப் போன்று ஓடி யொளிந்ததை யொப்புக் கொண்டு “நுங்களது தீய வாசனை யடையா வண்ணம் செட்டியார் விலகி யிருந்தாரே யன்றி அரங்கு இன்றி வட்டாடும் நுமது கல்வி யாற்றலுக்கு அஞ்சியன்று என்றதைத் திண்ணமா யெண்ணும்” என்று காரணம் கரைந்தீர். வேதத்திற் கூறும் மார்க்கத்தினைக் கொண்டவாது உபதேச வாசனை, தீய வாசனையாமாயின், வேத வுரையாய் ஆகமத்திற்குத் தப்பருத்தங் கொண்டவர்களது உபதேச வாசனை நல் வாசனை போலும். அறு பத்து மூவர் மடத்து முன்னிருக்கும் திருக் குளத் தீர்த்த வாசனையையும், மடத்தின் முப்புரமுமுள்ள மும்மல வாசனையையும் சதா முகந்து கொண்டிருக்குஞ் சொக்க லிங்கச் செட்டியாருக்கு, வேதாந்தத்தின் உபதேச வாசனையாய நல்ல வாசனையை முகரும் நற் புண்ணியம் யாண்டுளதாம். இலதாகவே, வேத நிந்தை செய்த பாவம், அழகாபுரி முதற் புண்ணிய க்ஷேத்திரங்களில் விலகி யிருக்கச் செய்தது. அஃது அவர் செய்த புண்ணிய விசேடமும் நம் மறமுமேயாம்.

“நீவிர் செட்டியா ரவர்களையும் அவரைச் சார்ந்த சைவ சித்தாந்தப் பெரியோர்களையும், சாமானியராகக் கருதினமையாலும்” என்கின்றீர். சாமானியம் பொதுவாம். அஃது யாண்டும் இருப்பதாம். அதனை யுடையோர் யாண்டு மிருப்பவராவர். அவ்வாறு நுமது செட்டியாரும் ஏனைச் சைவ சித்தாந்திகளும் வியாபகரா யிராமல், பரிச்சின்னர்களாய் ஒவ்வொரு தீ நாற்றக் கிரகங்களில் வசித்து வருகின்ருர்கள். நீவிர் அவர்களை வியாபகராகக் கொள்ளினும், யாம் அவர்களை மும்மலச் சரீரிகளாய், சிறப்பு அதாவது ஓரிடத்தது என்னும் விசேடண முடையவர்களாய், சர்வக்ஞத் தன்மை யின்மையால் அற்ப அறிவினர் என்றே அங்கீகரிக்கின்ரேம்.

“நும்மாற் குறி யிட்ட உபய பாஷா வேதாந்த பிரவர்த்தகாசாரியர் என்னும் வெரும் பட்டங் தாங்கி வெளி வேஷங் காட்டி பொருள் பறித் திந்நாட்டி லுலாவும் காசிகாநந்த சுவாமியின்” என்றீர். வேதாந்தியாகிய பெரியாரைக் குறியிடுதல் எமக்கும் எம்மவருக்கும் தகுதியே யன்றி, நுமக்கும் நும்மவருக்கும் தகுதி யின்மையி னின்ரும். தென் மொழி வட மொழி யென்னும் இரு மொழியிலும் வேதாந்த சாஸ்திரங்களைப் பிரவிர்த்திக்கும் ஆற்றல் அவர்கட்கு உண்டென்பதை, அவர்க ளியற்றிய நூல்

களே சாக்ஷி சாற்றும். அதனால், அவர்களது இயற் பெயரும் பட்டமும் காரணத்தால் வந்தனவே யாம். நம் மதத்தினரோ நா வன்மை யின்றி நாவல ரென்றும், சூத்திரா யிருந்து ஆரிய மொழி யற்பங் கற்றவராய், இரு மொழிக் கடலையும் நிலை கண்டுணர்ந்த தெய்வப் புலவர் என்றும், பஞ்ச நிந்தனைகளையும் பஞ்சத் துரோகங்களையும் உடையவர் புண்ணிய சீல ரென்றும், பிறராற் கொடுக்கப் பெறாது தாங்கி வரும் பட்டங்கள், காரணங் கருதியவழி நில்லாவாம். வெரும் பட்டம் பிறர் அஞ்சும்படியான பட்டமாம். தம்மிற் றாழ்ந்தோர் தம்மைக் கண்டஞ்சித் தம் ஆஞ்ஞையின்படி நடத்தற்கே பட்டந் தாங்குவதாம். “ சகலாகம பண்டிதர், முத்தமிழ் ரத்நாகரம், பண்டிதர், புலவர், கவி, நிமிஷ கவி, வர கவி, சாஸ்திரி, கநபாடி, பிரபு, பி-ஏ; எம்-ஏ ” முதலிய பட்டங்களைத் தாங்குதல், அவ ரவரிற் றாழ்ந்தோர் கண்டஞ்சி அவரவர் ஆஞ்ஞையின்படி யேவற் றொழிலைச் செய்தற்கேயாம் என்று இனியேனும் நல்லோர் பல்லோர்வாய்க் கேட்டுணர்வீராக!

கோ டின்றிக் காயாடுவது போன்று, நூ லின்றிச் சபை யேறும் நுங்கள் கல்விக் கஞ்சி யல்ல வென்று எழுதுகிறீர். எங்கள் சபையில் ராஜகிங்க (போலீஸ்கா)ரர்கள் வந்து பந்தோபஸ்தோ டிருக்க வேண்டிய ஆவசிக மின்றாம். நுஞ் செட்டியார் ஏகி, காரைக்குடி ரீடிங் ரூமிலும், தேவிகோட்டை வைசிய சிவாநந்த சபை “ ஒற்றுமை ” யென்னும் உபந்நியாசத்திலும், விஷ்ணு கோயில் கட்டின் நரகம் வருமென்று சொல்லிய விஷயத்திலும், நூலோடு கோட்டி கொண்ட தன்மையும், வைசிய பிரபுக்கள் வாயிலாக மன்னிப்புக் கேட்டுக்கொண்ட தன்மையும், நுமது ஈழத் துறவிகள் மதுரை திரு ஞான சம்பந்த மூர்த்தி மடாலயத்தில் நடந்த உபந்நியாசத்தில், கலெக்டர் முதலியோர் வந்து நும்மவர தடக்க மின்மையை யடக்கும்படியாக வந்த தன்மையும், நகரத்தார்கள் பலரு முணர்வர். “ அரங் கின்றி வட்டாடுந் தன்மையும், நூலின்றிக் கோட்டி கொளுந் தன்மையும் நும்மவர்க்கியற்கைக் குணமேயன்றி, எம்மவர்க்கு அரங்கோடு வட்டாடுந் தன்மையும், நூலோடு கோட்டிகொளுந் தன்மையும் இயற்கைக் குணமாம்.

பிறர் எளனஞ் செய்தற்கு உரித்தாய் நும்மவர் தாங்கும் பட்டம்போலன்றி, பிறர் வெருவும் பட்டத்தினை நமது சுவாமிகள் பெற்று விளங்குகின்றமையினா னன்றோ, சுவாமிக ளெழுதிய சூட்டுக் கோலாற் சூடுண்டு நீவிரும் நும் மதத்தினரும் அலறுகின்றீர்கள்.

நுமது மதத்தினரும், நுமது செட்டியாரும் பிறரை யேமாற்றுவதற்குக் கொண்ட வெளி வேடம்போலன்றி, உண்மை வேடந் தாங்கி உலகத்தாருக்கு உபகாரஞ் செய்கின்றமையா னன்றோ, நகரத்தார்கள் யாவரும் நமது சுவாமிகளைப் புகழ்ந்து கொண்டாடுகின்றார்கள்.

“ துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு, மில்வாழ்வா னென்பான் றுணை ” “ ஏற்ப திகழ்ச்சி, ஐய மிட் டுண் ” என்பன வாதி பிரமா



ணங்கட்கு மாறாய், இல்லற வைசிய விதுராச்சிரமத்தி லிருக்கும் நமது செட்டியார், நகர வைசியப் பிரபுக்க ளிடத்துப் பொய் கூறிக் கரவாகப் பொருளைக் கவர்ந்து நிந்தாப் புத்தகங்களை யச்சிடுதல் முதல் குடும்ப சம்ரக்ஷணை பரியந்தமான காரியங்களைப் பலரு முணரப் பத்திரிகையில் நீவிர் வெளியிடாது “ பரந்துல கேழும் படைத்த பிரானை, யிரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்கும், நிரந்தரமாக நினையு மடியார், இரந்துண்டு தன்னடி யெட்டச் செய்தானே ” என்னும் ஸ்ரீ மூலநாதர் வாக்கியத்தினைச் சிரமேற் கொண்டு, பிக்ஷை யேற் றுண்டும், பெரியோர்கள் மகிமை விளங்குதற்கு அநேக நூல்க ளச்சிட்டு வெளியிட்டும், வருகின்ற சுவாமிகளை, “ பொருள் பறித்து ” என்று வீணாக வசைமொழி புகன்ற நுமது புரட்டுப் புத்தியினை யாவரும் நன்குணர்ந்தவராகலின் மயங்கா ரென் றுணர்வீராக! நுமது செட்டியாருக்கும், நுமது மதத்தினருக்கும், ஹிந்தி மகாராஷ்ட்ரம் முதலிய பாஷா ஞான மின்றித் தென் மொழி கற்றவராகலின், இந்நாட்டி லுலாவுதல் தகுதியா மன்றி, ஏனைத் தேச பாஷா ஞானம் உடைய சுவாமிகட்கு, இந்நாட்டினும் எந்நாட்டினும் சென்று உபதேசித்தல் இயற்கையும் செயற்கையுமாம்.

“ ஆண்டா னடிமைத் திறங் கொண்டொழுகும் அறு பத்து மூன்று நாயன் மார்களது அடித்துணையையும் துணையாகக் கொண்டு ” என்றீர். சுந்தர மூர்த்திகள் சிவப் பிரதி விம்பர்களாகலின், சிவனை யாண்டா னென்றும் தன்னை யடியா னென்றும் எங்ஙனம் கொள்வர். நுமது கருத்துப் படியாயின், அடிமையாய சுந்தரர் இதுகாறும் கைலாயத்தில் சிவ திருவடியில் வேறா யிருப்பார். ஆகவே அவர் சீவ னென்றாகி, சிவப் பிரதிபிம்பரென்னும் நுமது கோள் கோளாம். சிவப் பிரதிபிம்பராய சுந்தரருக்குக் கரும மின்மையால், காமாதி யிச்சை கைலாயத்தி லுண்டாக வேண்டுவதில்லை. இவ்வாறாய குழறுபடை நும்மதத்தி லநேக முள. அவை யாவும் “ அசுத்த சைவர்கள் மேற் கேள்வி ” என்னும் நூலா லுணர்க.

நும்மால், “ மூ வீழத்தாரும், சேற்றூராரும், நாகையாரு மாயைவராய், ஒன்று கூடி சபை கூட்டுவதாகவும், அத்வைதிகளாகிய சந்நியாசிகள் காசி முதலிய விடத்திற்குக் கம்பி நீட்டி விடாமல் அவர்களைத் தடுத்து வைத்தல் நுமது சிரமேற்கொண்ட கடனும் ” என்று அறிவிக்கப்பட்டது. நும்மாற் சபை கூட்டுவதாக அறிவிக்கப்பட்ட அஞ்சுவர், எம்மவராகிய சந்நியாசப் பெரியாரைக் கண்டு, அஞ்சுவ தியற்கைக் குணமாக யாங்கள் யாண்டுங் கண்கூடாகக் கண்டமையின், அவர் அஞ்சுபவராய அஞ்சுவரே யாவர்.

சந்நியாசப் பெரியார் காசி முதலிய விடங்களில், “ஒன்றா யுலகனைத்து மானாயென் றப்பமுநி, பொன்றா மொழியாற் புகன்றிருக்க—குன்றாத, முத்தியிலு மும்முதலு முண்டென் றுரைத்தலெவன், பித்தமுறுஞ் சைவா நீ பேசு.” என்னுஞ் செய்யுட்படி பித்துப் பிடித்திருக்கும் நும் செட்டியார் போன்ற பேத வாதிகளின் நாவைக் கம்பியாகிய சூட்டுக் கோலால் நீட்டி விடுத லியற்கை யாகலின், கம்பி நீட்டுதல் அவர்கட்குத் தகுதியே யாம்.

யாண்டு ஆவசிகமோ ஆண்டுச் சென்று உலகோபகாரஞ் செய்பவர்களாகலின், ஈண்டு நமது செட்டியாருக்கு ஆவசிகமா யிருந்தமையின், காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களி லிருந்து எம்மால் வரவழைக்கப்பட்டு வந்து சூட்டுக்கோல் முதலிய கம்பி நீட்டுதலைச் செய்தார்கள். நுஞ் செட்டியார் கண் டஞ்சி யோடுதலாகிய கம்பி நீட்டுதலைச் செய்தார். கம்பி நீட்டுதலிரண் டிடத் திருப்பினும் ஓ ரிடத்துச் சுடுதல் என்றும், ஓரிடத்து 'ஓடுதல்" என்றும் பொருள் பயந்ததனை யுணர்வீராக !

'விரட்டு' என்னுஞ் சொல்லுக்குச் சகல இலக்கியக் களஞ்சியம் போலத் தம்மை மதித்து, இலக்கிய வழக்கின் றென்று கர்த்தபம் போன்று கரைந்த நீவிர், 'கம்பி நீட்டுதல்' என்னும் செந்தமிழ் மொழியைப் பன்னிரண்டு திருமுறையில் எம்முறையாற் கண்டீர். காணு திருக்க அம்மொழியைப் பதி வாக்காகக் கொண்டு கனைத்தீரே. "மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின், அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு" என்னும் பொய்யாமொழியைப் பொறுத்தீரே.

"அவர்களைத் தடுத்து வைத்தல்" என்று நும்மவர் சுபாவத்தை வரைந்தீர். பயந்தோடுபவர்களைத் தடுத்துப் பிடித் தடைக்க வேண்டுமேயன்றி, நிந்தித்த வொருவருக்குச் சூட்டுக் கோற் போட இரண்டாயிரம் மையிலுக் கப்பால், காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களி னிருந்து நான்கு திநத்தில் வந்தவர்கள், நமது அஞ்சுவோர் கூட்டும் சபையின்கண் வந்து, நும்மவரை யஞ்சும்படி செய்து அலை கடலுக் கப்பா லநுப்புவதற்கு அழிவுறுங் கைலாயத் திருப்பினும், எம்மவாது (Telegraph) அறிவிப்புப் பெற்றவுடன் வருவார்களென் றுணர்வீர்களாக !

சுவாமிகள் நமது செட்டியாரை "சபை யேற்படுத்திக் கொண் டறிவிப்பின் வாதப் போர் புரிய வாத் தயாரா யிருக்கின்றோம்" என்று எழுதியிருக்க, நுஞ் செட்டியார் சபை யேற்படுத்தாது, ஓடினமையின், சூட்டுக் கோலாற் சூடுண்டனர் என்பது யாவருக்கும் வெள்ளிடை மலை போல் வெளியாயிற்று.

இரு மேஷங்கள் தம்மில் மாறுபட்டு மற்போர் புரியுங்கால் ஒன்றன் மண்டை சற்றுடைந்து, அதனின்றும் ரத்தங் கால, அதனை யோர் நரி சென்று குடிக்குங்கால், ஏனை மேஷம் கோபாவேசத்தால் மற்ற மேஷத்தோடு பொருத இடையி லிரத்தங் குடித்த நரி யெமபுரஞ் சென்ற தெவ்வாறோ, அவ்வாறே நுஞ் சொக்க லிங்கச் செட்டியாருக்கும், வேதாந்திகட்கும் வாதப் போர் நடக்குங்கால், சூட்டுக் கோலால் நுஞ் செட்டியார் சூடுண்டு களைப்புற் றிருக்குங் காலம் பார்த்து, நீவிர் அஞ்சுவரைக் கொணர்ந்து அவர்க்கு முன் நரிமான நாட்ட நினைக்கின்றீர். அவ்வாறு நாட்டுவீராயின் நரியோ டொப்பாவ ரென் றுணர்வீராக !

நீவிர் குறிப்பிட்ட வாதத்திற்குரிய விதியை "அத்வைதிகளை வாதத்திற்கு வா வழைத்த அசுத்த சைவ சித்தாந்திக்கோர் வாத வரை யறை" என்னும் பத்திரிகையா லுணர்ந் தங்நிலை நிற்பீராக !

☞ அத்வைதி.

உ

சிவ மயம்.

அத்வைதிகளை வாதத்திற்கு வர வழைத்த,

## அசுத்த சைவ சித்தாந்திக் கோர்

# வாத வரை யறை.

---

அசுத்த சைவ சித்தாந்தியாரே !

நீவிர் அறிவித்த வாதத்திற்கு வரை யறை யிஃதாம்,

பிரமாண நூல்கள்:—

1. ருக், யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதமும், சந்தசு, கற்பம், வியாகரணம், ஜோதிஷம், சிக்ஷை, நிருத்தம் என்னும் ஆறங்கமும், கௌதமர், கணாதர் இயற்றிய நியாய வைசேஷிகமும், பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சையும், ஸ்மிருதிகளும், கற்கத்தா ஜீவாநந்த வித்தியாசாகராலும், புனா ஆநந்தாசிரமக் காரராலும் அச்சிட்ட பதினெண் புராணங்களும் ஆகிய பதினான்கு வித்தையாகிய சாஸ்திரங்களும், ஆரம்ப முதல் அந்த பரியந்தம் சோபான முறையால் விரோத மின்றிப் பிரமாணமாம். எம்மிடத்துள்ள தேவார, திருவாசக, திருமந்திர, பழய எட்டுப் பிரதிகளே பிரமாணமாம். ஏனைய நுமது நூல்களும் எமது நூல்களும் பிரமாணமன்றாம்.

2. வாதிக்கும் அத்வைதிகள்:—கும்ப கோணம் அத்வைத சபா பண்டிதர் பிரஹ்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிக ளவர்கள், சேற்றூர் சமஸ்தான பண்டிதர் சங்கர நாராயண கோவில் பிரஹ்மஸ்ரீ திருமலை சாஸ்திரிக ளவர்கள், சிருங்க கிரி மடத்து பண்டிதர் பிரஹ்ம ஸ்ரீ விஸ்வ நாத சாஸ்திரிக ளவர்கள், சிருங்க கிரி மடம் பிரஹ்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிக ளவர்கள், நியாய சந்திரரும், வேதாந்த பாஸ்கரருமாகிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சுப்பைய சுவாமிக ளவர்கள், உபய பாஷா வேதாந்த பிரவர்த்தகா சாரியராகிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ காசிகாநந்த சுவாமிக ளவர்கள், சிவ ஞாந பாஷியத்தினை எழுத் தெண்ணிக் கண்டித்து, சிவாநந்த பாஷிய மியற்றிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சிவாநந்த சுவாமிகளவர்கள், தமிழ், சமஸ்கிருதம், இங்கிலீஷ் என்னும் மூப்பாஷையிலும் வல்லுனராகிய வல்ல நாடு ஸ்ரீ சிவராம லிங்க சுவாமிக ளவர்கள், சிவ ஞாந போதத்திற்கு சிற்றுரை யியற்றிய சென்னை தியாஸபிகல் ஹைஸ்கூல் பண்டிட் ஸ்ரீ கோ. வடிவேலு செட்டியாரவர்கள் ஆவார்கள்.

3. வாதிக்கும் சைவ சித்தாந்திகள் இன்னவர், இவ்வளவின ரென்பதை வெளியிடுவீராக.

4. அத்வைதிகளுக்கு மத்தியஸ்தர்கள்:—சதுர்த் தச வித்தியா க்ஷீரா ப்தி ரூபமாக விளங்கும் பிரஹ்மஸ்ரீ யோகாநந்தேந்திர யதீந்திர சுவாமிக ளவர்கள், உபய பாஷா வல்லுநராய் விளங்கும் பிரஹ்மஸ்ரீ சிவாநந்த சுவா மிக ளவர்கள், சாந்தமே சொரூபமாக விளங்கும் கோவிலூர் மடாலயாதி பதியாகிய ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக ஸ்வாமிக ளவர்கள், தேவி கோட்டை ஜமீன்தார் ஸ்ரீமான் அள. அரு அருணசலஞ் செட்டியா ரவர் கள், மேற்படி யூர் ஸ்ரீமான் சித. முரு. முருகப்ப செட்டியா ரவர்கள், சென்னை, தைனம்பேட்டை, ஹைகோர்ட் வக்கீல் பிரஹ்மஸ்ரீ டி. ஆர். ராமச்சந்திர அய்ய ரவர்கள் பி.ஏ.பி.எல்; சென்னை மயிலாப்பூர் ஹைகோ ர்ட் வக்கீல் பிரஹ்மஸ்ரீ ஆர். குப்புசாமி சாஸ்திரியா ரவர்கள் பி.ஏ.பி.எல், ஸ்ரீரங்கம் வாணீ விலாசம் பிரஸ் புரோபிரைட்டர் பிரஹ்மஸ்ரீ பால சுப்பிர மணிய அய்ய ரவர்கள் பி-ஏ. முதலியவர்க ளாவார்கள்.

5. வாதிக்கும் சைவ சித்தாந்தி கட்கு மத்தியஸ்தர்கள் இன்னவர் இவ்வளவின ரென்பதை நீவி ரறிவிப்பீராக !

6. ஸ்ரீலஸ்ரீ ஜகத் குரு சங்கராசாரிய சுவாமிகளோடு வாதம் புரியுங் கால் மண்டன மிசிரர் பிக்ஷை செய்வித்தாங்கு வாதிக்கும் அத்வைதிகட்கும், அவர்களது மத்தியஸ்தர்கட்கும், அவற்றிற் குபபலமாக வரும் 250 வித்வ சிகாமணிகட்கும் வாதம் முடியும் வரை, அவரவர் யோக்கியதைக்குத் தக்க வாறு, உண்டி செய்வித் துறையு ளுதவல் நமது சபையார் கடனும்.

7. வாதிக்கும் எம்மவர்களும், மத்தியஸ்தர்களும், உபபல வித்வ சிகா மணிகளும், அவரவர்கட்குத் தகுதியான ஆசநங்களில் சபையில் வீற்றிருப் பார்கள்.

8. வாதத்திற்காக, காரைக்குடி மகார் நோன்புப் பொட்டலில் பெ ருங்கொட்டகை ஏற்படுத்தி, 30 நாள் வரை காலை 8 மணி முதல் 10 மணி வரையும், மாலை 3 மணி முதல் 5 மணி வரையும், நாடோறுந் தவங்காது நடை பெற வேண்டும்.

9. நம்மவர் அஞ்சுவரும் கலகப் பிரியராய், தேவி கோட்டை மது ரை முதலிய விடங்களிற் கலகம் விளைவித்தவராகலின், இச் சபையிற் கலாம் விளையாது செய்தற்கு, கலெக்டர், இன்ஸ் பெக்டர், கான்ஸ்டபிள் முதலிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இரு பக்கத்தார்க்கும் அவசியம் வேண்டும்.

10. ஈழ தேயத்து அகம்படியார், சான்றார், ஈழுவர், ஆயர் முதலி யோர்கள் இங்கு வந்து பிள்ளை யென்றும் நாவலரென்றும் புதுப்பெயர் தாங்கி, பாண்டி தேயத்தும் ஏனைய விடங்களிலுமுள்ள வேளாளர் என்னும் சைவர்களோடு, பந்தியி லொருங் கிருந்துண்டு, அவர்கள் குலங்களைத் தீண் டா வண்ணம் கெடுத்ததுபோல், செய்யாமல், இச் சபைக்கு வரும் வித்வ சிகாமணிகட்கு அவரவர் வருணாசிரமங்கட்குத் தக்கவாறு போஜநஞ் செய் வித்தல் நமது சபையோர் கடனுமென்பதை மூக்காலு முணர்வீராக !



11. சபை நடை பெறுவதற்கு மூன்று மாதத்திற்கு முன்னரே, இவ் வாத விதியை ஒப்புக் கொண்டீர் என்பது தோன்றப் பத்திரிகை வாயிலாக வெளியிடுவீராக !

இவ்விதிகட் குடன்பட்டீராயின் தேவி கோட்டை ஜமீன்தார் ஸ்ரீமான் அள. அரு. அருணசலஞ் செட்டியா ரவர்கள், ஷை யூர் ஸ்ரீ மான் சித. முரு. முருகப்ப செட்டியா ரவர்கள் என்னும் இருவரையும், நமது சபையோ ராய அஞ்சுவர் நேரிற் கண்டு, இவ் விதிகட்கு யாம் உடன்படு கின்றோம் என்று கூறுவாராயின், அவர்கள் எம்மவர் யாவருக்கும் அறிவிப் பார்கள். அதனை யுணர்ந்து யாங்கள் யாவரும் வாத சபைக்கு வருவோம்.

13. பதி னொன்கு வித்தையின் வாயிலாக, அத்வைதமே உள தென்று, அத்வைதிக ளாகிய யாங்கள் நிலை நாட்டுகின்றோம். அதனிடத்து நீவிர் தோஷங் கூறின், யாங்கள் அத் தோஷத்தைப் பரிகரிக்கின்றோம். அல் லது, பதி னொன்கு வித்தையின் வாயிலாகத் துவைதமே யுள தென்று நிலை நிறுத்துவீ ராக. யாங்கள் அதனிடத்துத் தோஷாரோபணஞ் செய்கின் றோம் அதனைப் பரிகரித்தற்கு நும்மவர்க் காற்ற லின்றாயின், நும்மவர் தோல்வி யுற்றார் என்று யாவரு முணர்தற்குத் தத்துவ மசி மகா வாக் கியம் அக் கழகத்துத் தோல்வி யுற்றார்க்கு உபதேசிக்கப் பெறும்.

மேற்கூறிய விதியோடு நம்மவராய அஞ்சுவர் "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின், எண்ணுவ மென்ப திழுக்கு" என்னும் பொய்யா மொழிக் கிலக்காகாது, நீவி ரெழுதிய வாறே, பின்னிடாது சபை கூட்டு வார்க ளென்று தக்ஷிணா மூர்த்தியைப் பிரார்த்திக்கின்றேன்.

☞ அத்வைதி.

உ

சிவ மயம்.

## மாயா வாத துவைத மலத் தடிப் பேறிய அசுத்த சைவ

# சித்தாந்திக் கோர் கூற்று.

அசுத்த சைவ சித்தாந்தியாகிய அன்பரே !

நீர் "அப்புண்ணிய சீலர் வசிக்குந் திருமடத்தில்" என்று சொக்க லிங்கச் செட்டியாரை வியக்கின்றீர்.

"திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற் றீவண்ணர் திறமொரு காற் பேசா ராகில், ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகி லுண்பதன்முன்

மலர்பறித்திட் டுண்ணு ராகில், அருநோய்கள் கெடவெண்ணி றணியா ராகி லளியற்றூர் பிறந்தவா றேதோ வென்னிற், பெருநோய்கண் மிகநலி யப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே" என்று பெரியார் கூறியிருக்கச் சிவாலயத்திற்குச் சென்று தரிசியாதவரா யும் காரைக்குடி மூத்துப் பட்டணத்தில் இருக்கும் இரு வைசிய மணிகளைப் பெண் விஷயமாய்த் தர்ம சாஸ்திரத்திற்கு மாறுபட்டு, இரு பதி னாயிரத் துக்கு மேற்பட்ட திரவியத்தை வாங்குங்க ளென்று ஏவுபவராயும் உள்ள சொக்கலிங்கச் செட்டியார் புண்ணிய சீல ராவாரேல், உலகத்தில் இவ் வாறுய செய்கை யுடையா ரியாவரையும் புண்ணிய சீலரென்றே கொள் ளல் வேண்டும் அவ்வா றுலகம் ஒப்ப வில்லை.

புரட்டராகிய நீவிர் "வெரும்" என்றும், "ஆண்டா னடிமைத் திறங் கொண் டொழுகும் அறு பத்து மூன்று நாயன் மார்கள்" என்றும், உள்ள வாக்கியங்க ளமைந்த பத்திரிகையை வெளியிட்ட பின் ஐயுற்று, "வெறும்" என்றும், "ஆண்டா னடிமைத் திறங் கொண் டொழுகிய அறு பத்து மூன்று நாயன் மார்கள்" என்றும் திரித்துப் புரட்டி வெளி யிட்டீர். இவவாறுய புரட்டுத் தொழில் நும்மவர்க்கும் நுமக்குந் தொ ன்று தொட்ட வழக்கமேயாம்.

நுமது செட்டியாருக்குச் "சின்னச் சோக்க லிங்கச் செட்டியார்" என்னும் பெய ருண்மையின், அப்பெயருக் கியையச் சிறு தன்மையாகிய நிந்தைகளைப் பல புத்தகங்களி லெழுதி வெளியிடுகின் றமையினாலும், அக ரக் சாரியை பெற்று, சோதிக்கும்படியான குறி யுடைமையினாலும், அப் பெய ரவர்க்குக் காரணக்கம் பெற்ற தென்றறிக!

"பகட் டுரை காட்டிப் பதுங்கலானீர்" என்கின்றீர். பகட்டுரை காட்டுதலாகிய வஞ்சகத் தன்மையும், பதுங்குதற் கிடமாயுள்ள அழகாபுரி முதலிய விடங்களுக்குச் சென்று ஒளியுந் தன்மையும், நுமது செட்டியா ரிடத்துள தென்பதை யாவரு முணர்வர். அவ்விரு குணங்களு மெங்க ளிடத் தற்பமேனு மில்லை யென்பதை யெம்மவரது புத்தகங்களும் பத்திரி கைகளும் அறிவிக்கும்.

"அவர்களைத் தடுத்து வைத்தல் நுமது சிரமேற் கொண்ட கடனும்" என்கின்றீர். பிறர் பாகத்திற்குரிய சொத்துக்களை கவரும்படி காவுடைக் கல்வி கற்று முயற்சிக்கும் நுஞ் செட்டியாரிடத்துப் பொரு ளின்மையின் ஆச்சாபுரம் முதலிய விடங்கட்குச்சென்று பதுங்கிவிடாது தடுத்து வைத் தல் நுமது சிரமேற் கொண்ட கடனும். அங்ஙன மின்றிச் சகத் குருவாக விளங்கும் வேதாந்திக ளாகிய சந்நியாசப் பெரியாரை, அவர்கள் பக்தர்கள் யாண்டிருப்பினும் அழைத்து வருவார்க ளாகலின், அவர்களைத் தடுத்து வைத்த லெவர் கடனு மன்றும்.



நும்மவர் வெளியிட்ட பத்திரிகையில் "வானுடர், நானுனென், ஆனு லும், தேனுடும்" என்று நான்கடியு மிருக்க, இரண்டா மடியில் "நாம் பிரமம்" என்று புரட்டி, எதுகை முதலியன விளங்க வில்லை யென்றும், ஆண்டவ ரிருக்கின் "நானு னென்று" திரித்தற்குத் தண்டனை கிடைக்கு மென்றும் கரைந்தார். அவர் எவ்வீழக் குருவினிடத்து இலக்கிய இலக் கணங் கற்றனரோ? "வானுடர்" என்பதற்கு "நாம் பிரமம்" என்பது எதுகைத் தொடையாமோ? அப்புத்தகத்தினைப் பெற்று மூழுக் கவியினையு மறிந்து முறையிட்டனரா? "பொருளில் லார்க்குப் புத்தக மீங்கில்லை. அருளிலார்க் கவ்வுலக மாங் கில்லை." என்றுயினரோ! செய்யு ளிலக்கணம் கற்க வேணடு மாயின், இவரிடத்திற்றுன் செல்லல் வேண்டும். நுமது செட்டியாரை நீர் வெவ்வேறு கைச் சாத்திட்டு, பல பத்திரிகையில் வியக் கின்றமையின், அவ் வியயப்பினைத் தகர்க்கும் "சோக்க லிங்கச் செட்டி யார் துராசார நூற்றெட்டு" என்னும் நூலைக் கண்டு அடங்குவீராக!

எம் மவரைக் காரைக்குடிக்கு வருங்கால் நுமது செட்டியார், ராம சாமிச் செட்டியாரைக் கொண்டு, பஞ்சமா பாதகங்களி லொன்றாய், பிரம ஹத்தியாய கொலைத் தொழிலைச் செய்யும்படி யேவுகின்றனராம். இவ் வாறு, கொலை செய்யக் கருதும், சொக்க லிங்கச் செட்டியார், இராம சாமிச் செட்டியாரென்னு மிருவரையும், காரைக் குடியில் இரா வண்ணம், வேறு தேயத்துக் கநுப்புதல் நகரத்தார்களது முக்கியக் கடமையு மொன்றாம். இவ்விருவரும் ருத்திர மூர்த்தியி னிடத்தி லிருந்து சம்மாரத் தொழிலைப் பெற்றனரோ? வாத சபையில் இவ்வாறுய கொலை செய்யக் கருதுவ ரென்று கருதியே, கலெக்டர் முதலிய வுத்தியோகஸ்தர்கள் விரும்பப் படுபவராகின்றனர். விரிப்பிற் பெருகும். அமைக!

☞ அசுத்த சைவ சித்தாந்திக் கோர் கூற்றுவன்.

---

உ

சற் குருப்யோ நம:

# நகரத்தார்கட் கோர் விஞ்ஞாபநம்.

## காரைக்குடி அறு பத்து மூவர் மடச் சோக்க லிங்கச் செட்டியார் சூட்டுக் கோலோடு தேக்ஷணபுரம் சென்றதும் ஆண்டிருக்கும் தர்ம ராஜ சபைக் காரிய தரிசி சித்திர குப்தன் அறிவித்ததும்.

நகரத்தார்களே!

காரைக்குடி அறு பத்து மூவர் மடத்துச் சொக்க லிங்கச் செட்டியாரு க்கு ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகள் சூட்டுக் கோல் போட்டிருக் கிறார்க ளென்

பது யாவரு முணர்வர். அச்சூட்டுக் கோலை கைக் கொண்டு மேற் குறித்த சொக்க லிங்கச் செட்டியார் தெக்ஷண புரம் சென்றனராம். அங்குச் சென்று, தர்ம ராஜ சபையில் கணக்குத் தொழிற் செய்யும் சித்ர குப்தனிடம், சூட்டுக்கோலைக் கொடாது விஷயத்தை மாத்திரம் கொடுத்தனராம். அதனைச் சித்ர குப்தன் பெற்றுப் பார்க்குங்கால், முதலி லுள்ள டைடில் பேஜில் அவனுக்கு எண்ணைய முண்டாயினவாம். அவ் வையங்களை நிவர்த்தித்துக் கொள்ள தெக்ஷண புரத் திருந்து, கோவிலூர் ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகளிடம் வருதற்குக் காலம் பெருமையின், அச்சுப் பத்திர வாயிலாகச் சுவாமிகளிடத்து வினவிச் சமாதான முறுவே னென்று கருதினனும். அதற்குத் தெக்ஷண புரத்து அச்சுவாகன மின்மையின், நேராக தரும ராஜா விடம் அநுமதி கேட்க, அவன் வேண்டுகோட் கிசைந்து, தருமராஜா அநுமதி கொடுத்தனராம். அதனைப் பெற்றுத் துவாதசாந்த புரமாகிய மதுரையை யடைந்து எண்ணையத்தை யறிவிக்கும் பகிரங்கப் பத்திரிகை யச்சிட்டனனும். அச்சிட்டவன் மேற்படி சுவாமிகட் கனுப்பத் தன்னிடத் தேவலரின்மையின், மோட்டார்கார் வாயிலாகச் சொக்கலிங்கச் செட்டியார் மாணுக்க னிருக்கும் காரைக்குடிக்கு அனுப்பினனும். அதனை மாணுக்கன் பெற்று போஸ்டு வாயிலாக அனுப்பின் சுவாமிகளிடம் எத்தனை தினத்தில் சேருமென்னும் அறிவின்மையின், அறிவிலியாகிய மாணுக்கன் போஸ்டின் வாயிலாகச் சுவாமிகட் கனுப்பினனும். அது, தம்மகத்திற் கொண்ட காலவளவையின் வரப் பெருமையின், சுவாமிகளால் விடை யிறுக்கப் பெருது போயிற்று நிற்க, அதனைக் கண்ட யாம் நகரத்தார்கட்கு இவ்விஷயத்தை யறிவிப்பான் எழுதத் துணிந்தனம்.

சொக்க லிங்கச் செட்டியார் சிவ பத்த ரென் றறிவிக்கின்றமையின், சூட்டுக் கோலைக் கொண்டு கைலாயஞ் சென்று சிவனிடத்து முறையிட்டிருக்கலாம். அங்ஙனமின்றி தெக்ஷண புரஞ் சென்றமையின், இவர் செய்த திருப் புத்தூர்ப் புராணப் புரட்டு, ஆண்டவர் சுவாநுபவத் திருவாக்குப் புரட்டு முதலிய புரட்டுகளையும், சிவ நிந்தை, சிவாவதார நிந்தை, சிவ னடியார் நிந்தை, சிவ குரு நிந்தை, சிவ குரு குல நிந்தை, சிவப் பிராமணர் நிந்தை, வேத நிந்தை, வேதாந்த நிந்தை, விஷ்ணு நிந்தை, முதலிய நிந்தைகளையும், செய்தவரெனச் சித்ர குப்த னறிந்தவ னாதலின், தமது யஜமானனது தூதர்களை யனுப்பி, இவ்வரைப் பிடித்துவரச் செய் திருக்கலாமென்று தோற்றுகின்றது. அங்கு அவர்கள் பிடித்துச் சென்றதும், இவருடைய குற்றக் கணக்குக ளங்கிருந்தமையின், அதனற் றப்பிக்க முடியாதெனக் கருதி, சூட்டுக் கோலைக் காண்பித்தனர் போலும். அச் சூட்டுக் கோல் விஷயங்களின் கணக்கு, சித்ரகுப்தனிட மின்றிப் பிரமலோகத் திருக்கின்றமையின் பிரம லோகத்திற்குச் செல்லத் தனக் காற்ற லின்மையால், சுவாமிகட்கே யெழுதி, மாணுக்கனுய், பொருள் தெரிந்துகொள்வே னெனக் கருதினன் போலும்.



தொண்ணூற் ருறு பக்க முடைய சூட்டுக் கோற் புத்தகத்தில், முதற் பக்கத்தில் எண்ணைய முளவா மாயின், முழுப் புத்தகத்தும் 768 ஐய முளவாம். அதனை நிவர்த்திக்க 96 பகிரங்கப் பத்திரங்க ளச்சிட வேண்டி வரும். அதற்குப் பொருட் செலவு கால முதலிய விரையமாகு மாதலின், அச் சித்ர குப்தன் இவ்வாறு செய்யாது, சுவாமிக ளிடத் தொரு திங்கள் வரைத் தொண்டு செய் தொழுகி மாணுக்கனு யிருப்பின், சூட்டுக் கோற் பொருள் முழுதையு முணர்ந்து கொள்ளலாம். நிற்க,

சொக்க லிங்கச் செட்டியார், சூட்டுக் கோல் விஷயமாகப் பதிற் கிடைக்கும் வரை, தர்ம ராஜ சபையி லுள்ள சித்ர குப்தனுற் செய்யப்பட்ட சிறைக் கூண்டில் நின்று கொண் டிருப்பர். அங்கு, பிரம லோகத் திருந்து மறுமொழி கிடைக்கப் பெறின், இவரது புரட்டுக் குற்றத்திற்கும், நிந்தைக் குற்றத்திற்கும், சித்ர குப்தன் தனது கணக்குப்படி தண்டிப்பன். அவர் அத் தண்டனை பெற் றங்கிருந்து மீளாது தெக்ஷண புரத்திருக்க வேண்டியவ ராகலினுனும், ஆண்டுச் சென்றவர்கள் மீண்டும் திரும்புவ தின்றாகலினுனும், அவருக்குக் கடித முதலியன எழுத வேண்டிய நகரத்தார்களும், நோட்டீஸ்கள் அனுப்ப வேண்டிய சைவ சித்தாந்திகளும், வேதாந்திகளும், ஆகிய யாவரும் "காரைக்குடி அறு பத்து மூவர் மடத் திருந்து வந்திருக்கும், சொக்க லிங்கச் செட்டியாருக்குக் கொடுப்பது-தெக்ஷண புரம்" என்ற விலாசத்துடன் அனுப்ப வேண்டும்.

சித்ர குப்தன் விஜய தசமி யன்று காரை மா நகர்க்கு வருவதாக நோட்டீஸால் தெரிகின்றமையின், அவனிடத்து, இந்த நோட்டீஸை யாங் கொடுத்து விடலா மெனக் கருதி யிருக்கிறேம்.

படிப் பில்லாதவர்க ளுடைய வழக்கைப் பொருளாகக் கொண்டு வீர சேகரர் என்று, புதுப் பெயர் புனைந்ததற்குக் காரணங் கேட்ட சித்ர குப்தன், "சின்னச் சோக்கன்" என்ற பெயரை மாற்றி, "ஸ்ரீமான் சொக்க லிங்கச் செட்டியா ரவர்கள்" என்று எழுதிக் கொண்டதற்குத் தண்டனை செய்யாத தேனே?

"அண்ணாமலை ஞான தேசிக சுவாமிக ளவர்கள்" என்று யாண்டும் பிரசித்தமான பெய ரிருக்க, அதனைப் புரட்டி "அண்ணாமலை தேசிக சுவாமிக ளவர்கள்" என் றெழுதிய சித்ர குப்தன், பிரம லோக வாசிகளாற் றண்டனை யடைவா னென் றுணர்க.

தெக்ஷண புரஞ் செல்லுஞ் சைவ சித்தாந்தியாய சொக்க லிங்கச் செட்டியாரைத் தண்டிக்கு மாற்ற லுடைய சித்ர குப்தன், பிரம லோக வாசிகட்குத் தீர்ப்புச் செய்வதற்கு ஆற்ற லற்றவ னாகலின், "தவறினுல் ஒரு தலையாகத் தீர்மானஞ் செய்ய வேண்டியதா யிருக்கு மென்பதை யறிய வேண்டியது" என்று எழுதியது அறிவுக் குறைவினுலாம். அவ்வா றறிவிலியாய சித்ர குப்தன் தன் மநம் போன வாறு தீர்ப்புச் செய்வனுயின், சிவ ரூபமா

யும், ருத்திர ரூப மாயும், பிரஹ்ம ரூபமாயும், இருக்கின்ற பிரம லோக வாசிகளாகிய எம்மவரான், மார்க்கண்டேய ரிடத்து வந்து யமன் பட்டது போன்று, தர்ம ராஜனும், அவன் கணக்கனாகிய சித்ர குப்தனும், தண்டிக்கப்பட்டுச், சிறைச் சாலை யடைவார்க ளென் றுணர்வார்க ளாக.

☞ பிரஹ்ம லோக வாசி.

உ

சிவமயம்.

## சுத்தாத்துவித சைவ சித்தாந்தியாகிய

# பல் லறையர் முகத் தறை.

திரு மூல நாயனார் கூறிய அசுத்த சைவத்துட் பட்ட தாந்திரிக ரொருவர் "சுத்தாத்துவித சைவ சித்தாந்தி" என்று அடியில் இட்டு "அத்வைதி" என்பவருக்கு எழுதிய "பல் அறை" என்ற நிந்தைப் பத்திரிகை கண்டனம்.

இன்றளவும் வேதாந்திகளோடு வாது செய்து வென்றவர் உலகத்தி லொருவரு மிலர் என்பதற்கு, என் றென்றைக்கும் வேதாந்த சாஸ்திரங்கள் ஆதித்தன் போ லலங்கரித்து விளங்குவதே தக்க சான்றாம். ஸ்ரீ ஞான சம்பந்த ஸ்வாமிகள், ஸ்ரீ மாணிக்க வாசக ஸ்வாமிகள், ஸ்ரீ மூல நாதர், ஸ்ரீ உமாபதி சிவாசாரிய ஸ்வாமிகள் முதலியோர்கள், புற மதங்களை வென்றும், கண்டித்தும், "வேதத்தின் ஞான காண்டப் பொருளை விளக்குவது" என்னும் வேதாந்தத்தினைப் புகழ்ந்து தமது நூல்களிற் கூறி யிருப்பார்க ளாயின், இவ ரன்ன "சைவ சித்தாந்தி" "சுத்தாத்துவித சைவ சித்தாந்தி" "அசுத்த சைவ சித்தாந்தி" என்பவரால், வாதிட்டு வெல்லும் நீர்மைத்தோ? தூர்வை யாசகப் படலக்காரர் தம்மின் மிக்கா ரிலரெனக் கருதி, ஆணவ முனைப்பா லாமா வன்ன ஆரவாரித்தன ரென் றுணரா தாரவாரிக் கின்றனர்.

"அவா தத்வைத நிலை—சைவ வைணவ மாத்துவ நிலைகளினும் போந்து வியபிசரிக்கின்றது" என்றார். "சாத்திய அபாவ முடைய தன்கண் இருக்கும் எது வியபிசாரமாம்" என்பது வியபிசாரத்தின் இலக்கணம். அநுமானத்தின்கண் துணி பொருட் பெறுதி யில்லா விடத்து, எது இருக்குமாயின் "வியபிசாரம்" என்னும் தோட முண்டாம். ஈண்டு "அத்வைதி" என்பதன்கண் அநுமான மெவ்வாறு? "பிரதிஞ்ஞை, எது, உதாஹரணம், உபநயம், நிகமநம்" என் றைந் தவயவங்க ளின்றி யநுமான முண்டாமோ? அன்றியும், அதிவியாத்தி (சேறல்) தோஷமுங் கூறுதற்



கிடனின்று. "கோடுவால் முதலியன வுடையது பசு" என்னின், அதிவியாத்தி தோடமா மதனை நீக்குதற் கெவ்வாறு "அலைதாடி கோடு முதலியன வுடையது பசு" என் றறையப் படுகின்றதோ, அவ்வாறே, சைவர், வைணவர், மாத்துவர், (சிவ) அத்வைதர் முதலியோர்கள், வேதாந்திகள் முன்னர்க் கொண்ட "அத்வைதம்" என்னுஞ் சொல்லி லுள்ள அதிவியாத்தியினை நீக்குதற்கு "அத்வைதம்" என்னுஞ் சொல்லுக்கு முன் "சுத்த" என்றும், "விசிஷ்ட" என்றும், "சிவ" என்றும் உள்ள சொற்களை மிகைப்படுத்திக் கொண்டார்கள். இதனை யுணராது "அத்வைதியை வழுவியவர்" என்று எழுதிய இவர் தாமா, தர்க்க ஞானத்தோடு வாதத்திற்கு வந்து வேதாந்திகளை வெல்லுஞ் சைவ சித்தாந்திகளைத் தேர்ந் தெடுப்பவராய்ச் சபை கூட்டுவாரு ளொருவ ராவர்? அத்வைதி யென்பதனை லிங்கமாகக் கருதி, வழுவியதாக அத்வைதி லிங்கத்தில் வாய்போடக் கருதுகின்றனர் போலும்.

"அசைவராய இவர்" என்கின்றார். லக்ஷியமாய சிவ சொரூபமா யிருக்கும் வேதாந்திகள் சைவரே யாவர். மூர்த்தியாய சிவ சொரூபத்தின் றிருவடி யடையும் சிவ ஞானபோத வுள்ளிட்டாரும் சைவரே யாவர். அங்ஙன மாயினும், திரு மந்திரம், "நான் சிவன், நான் பிரஹ்மம்" என்னுங் கொள்கை யுடையோர் "சுத்த சைவர்" என்றும், பொன் கடுக்கன், குண்டலம், பொன் வடம் முதலியவற்றைத் தரிக்கும் மதக் கோட்பாட்டுள்ளிட்டார் "அசுத்த சைவர்" என்றும் கூறுகின்றது. அதனால், சுத்த சைவத்தி னின்றும் விலக்குதற்கு அகர வடை கொடுத்து 'அசுத்த சைவர்' என விளித்தனர். இதனால், ஈண்டைக் குபயோக மின்றி, வேதாந்திகளை "அசைவர்" என்றும், "அகர வினம் பற்றிப் பின்ன வரையே விளித்தன" என்றும், "அசுத்த சுத்தாத்துவிதம் என்னும் வழக்கா றின்மையின்" என்றும் மிகைப் பொருள் கூறி, "ஈண்டைக் குபயோக மின்றிய பொருளைக் கூறுதல்" என்னும் அர்த்தாந்தரமாகிய தோல்வித்தாந அறையைப் பெறுதற் கிலக்காயினர்.

"சபை கூட்டுவோரை யறிவித்தவர் சைவ சித்தாந்தி, சபை கூட்டுவோர் சுத்தாத்துவித சைவ சித்தாந்தி, சபைக்கு வாதத்திற்கு வருவோர் அசுத்தாத்துவித சைவ சித்தாந்தி" என்று இவர் வாக்கியமே வெளியாக்குகின்றது. எனெனின், மூவருள் முன்னவருக்குப் பின்னவர்கள் விசேடண முடையவ ராகலின். இதனா லன்றோ, திரு மந்திரம், (ஐந்தாந் தந்திரம் 2-வது அசுத்த சைவம்-1423) "இணையார் திருவடி யேத்துஞ்சீ ரங்கத், திணையா ரிணைக்குழை யீரணை முத்திரை, குணமா ரிணைக்கண்ட மாலையுங் குன்றா, தணைவாஞ் சரியை கிரியையி னார்க்கே" 1424. "காதுபொன் னார்ந்த கடுக்க னிரண்டுசேர்த், தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன், சோதனை செய்து வுபதேச மார்க்கராய், ஓதி யிருப்பா ரொருசைவ ராகுமே" என்று கூறியது. நிற்க, திரு மந்திரம் எட்டாந் தந்திரம் 2-வது மத்திய சாக்கிராவத்தை 2179 "ஆகின்ற தொண்ணூற்றே டாறும் பொதுவென்பர்,

ஆகின்ற வாறு றருஞ்சைவர் தத்துவம், ஆகின்ற நாலேழ் வேதாந்தி
வைணவர்க், காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே" என்று கூறிய
படியே, "ஈங்குமா மிருபத்து நான்காவ தாகு, மிருபத்தைந் தாவதுதான்
மூலவகங் காரம் ; ஆங்கதனை யடைதலுறுஞ் சிதாபாச சீவ, னறையுமிரு
பத்தாறு மவன்மாயை மருவும் ; ஓங்கொளியா மீசனிரு பத்தேழா மவ
னவ்,வுயிர்முதலாந் துரியனிரு பத்தெட்டா மவன்" என்று வேதாந்த சூடா
மணியிலும், "தூல சரீரம் - 6 ஞானேந்திரியம் - 5, கர்மேந்திரியம்—5,
பிராணுதிவாயு-5, மநம்-1, புத்தி-1", ஆகச் சூக்ஷ்ம சரீர தத்துவம் 17 ;
காரண சரீரம் - மாயை-1, அவித்தை-1, ஜீவன் ஈப்ஸ்வரன் பிரஹ்மம் 3 ;
என்று ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் " தத்துவ போதம் " என்னும் நூலி
னுங் கூறியாங்கு, இருபத்தெட்டுத் தத்துவங் கொள்ளும் வேதாந்தியாய
எம்மவரை "மாயாவாதி யொருவர்" என்றும், " மாயாவாதிகளது " என்
றும், "மாயா வாதிகள்" என்றும், "அம்மாயாவதியர்" என்றும், "கூடஸ்
தராய மாயாவாதிகளும்" என்றும், "இம்மாயாவாதியார்" என்றும்,"கரை
பவர் இம்மாயா வாதியார்" என்றும், ஒரு சிறு துண்டுப் பத்திரிகையில்,
எழிடங்களி லெழுதி, "அபசித்தாந்தம்" என்னும் தோல்வித்தாநக் கூற்
றிற் கிலக்காயின ரிவர். எங்ஙன மெனின்:-28-தத்துவங் கொள்ளும்
வேதாந்திகளாய எம்மவரோடு சைவ சித்தாந்திகட்கு வாதம் நடக்குங்கால்
25-தத்துவங் கொள்ளும் மாயாவாதி யென்றே யுத்தரங் கொடுத்துக்
கொண்டே வந்தமையாலாம்.

" அத்வைதி " என்பவர் வாத வரை யறையில் " ஏனைய நுமது நூல்
களும், எமது நூல்களும் பிரமாண மன்றும் " என்று அறைந் திருப்பவும்,
அதனை யுணாரது, "சிவாகமம், பாஞ்சராத்திரம், வைகாநசம், உலகாயத
நூல், பிடகநூல், யோகநூல், சாங்கியநூல், வாசிஷ்டம், கீதை, பெரிய
புராணம், நாலாயிரப் பிரபந்தம், முதலிய நூல்களையும், பிரமாண நூலாக
வாத சபையிற் கொண்டுவர வேண்டும்" என்றும் "அவற்றைப் பிரமாண
நூல்களிற் சேர்க்காது அத்வைதி யெழுதியது வழுவாம்" என்றும், கரை
கின்றனர். இதனுல், அத்வைதி அறைந்ததனை, ஏனையர்கள் பத்திரிகை
வாயிலாக வறிந்திருந்தும், இவ ரறியாமையின் " அஞ்ஞாநம் " என்னும்
தோல்வித்தாநத்தை யடைந்தனர். "அத்வைதி" யென்பார் பொதுவாகப்
பிரமாண நூலை வகுக்காது, தமக் குடன்பாடான நூல்களை வகுத்தன ராக
லின், இவர் நிரநுயோஜ்யாநுயோகம் (உடன்பாடற் பால தல்ல தனை
யுடன் படுதல்) அஃதாவது:—"தோல் வித்தாந மின்றிய விடத்துத்தோல்
வித் தாநத்தை யறிவித்தல்" என்னும் தோல்வித் தாநத்தை யடைந்த
னர்.

"இங்கே, யிவர் வேதாந்தமாகிய உபநிடதங்களை யெடுத்துக் காட்ட
வில்லை" யென்றுர். உத்தர மீமாஞ்சை வேறு, வேதாந்தமாகிய உபநிட
தம் வேறு என்று கருதுகின்றனர் போலும். வேதாந்தமாகிய வுபநிடதத்



தின் பொருளையே உத்தர மீமாஞ்சை விசாரிக்கின்றதென்று உணர்வா
ராக!

"இவர் பிரமாணமாகக் கொண்ட பூர்வ மீமாஞ்சை மதத்தர் உபநிடதங்
களை யங்கீகரியார்" என்றும், "உத்தர மீமாஞ்சை மதத்தர் கர்ம காண்டத்
தை யொதுக்குவர்" என்றும், எழுதி யிருக்கின்றுர். இவர் கல்வியின்
றிறனே திறன்! பூர்வ மீமாஞ்சை மதத்தர் வேதாந்தமாகிய வுபநிஷதங்க
ளைத் தேவதையினை விளக்குவதாய்ச் சாதநமாகவும், உத்தர மீமாஞ்சை
மதத்தர் கன்ம காண்டத்தை அந்தக்கரண சுத்திக்குக் காரணமாய்ச் சாதந
மாகவும், அங்கீகரிக் கின்றன ரென்று, இனியேனு முணர்வாராக!

"ஆகமம் பிரமாண மன்றுயின் யாங்களும் ஆலயத் திருப்பணி செய்
கின்ருேம். ஆலய வழிபாடு செய்கின்ருேம் என்று பெருமை பாராட்டுவ
தென்னை?" என்கின்றுர். ஆகம மின்றுயின் ஆலயங்களும் வழிபாடுக
ளும் இன்றெனக் கருதுகின்றுர். பரமேஸ்வரன் ஆகமமாகிய வுரை
யெழுதுவதற்கு முன், மூலமாய வேதத்தின் பொருளை யுணர்ந்து, அதன்
வழித்தாய் ஆலயங்களும் ஆலய வழிபாடுகளும் உலகத்தி லிருந்த துண்
டோ? இல்லையோ? வேதத்திற் கூறிய பொருளை ஆகமம் விரித் துரை
செய்வதே யன்றி வே றின்றும். ஆகமத்தை முக்கியமாகக் கொள்ளா
தார்க்கு வைதிகாலயமும், வைதிக வழிபாடு முண்டென் றுணர்வாராக!

சிதம்பரத்தில் ஸ்ரீ தீக்ஷிதர்களும், ஆளுடையார் கோவிலில் நம்பியார்
களும், இராமேஸ்வரத்தில் ஆரியர்களும், திருச்செந்தூரில் போத்திமார்
களும், திருவானைக்கா அகிலாண்டேஸ்வரிக்கு வைதிகரும், காசியில் பண்
டாக்களும், ஸ்மார்த்தர்களா யிருந்து வைதிக பூஜை செய்து கொடுக்கும்
விபூதியை, ஆதிசைவர் முதலா யுள்ள எவ்வகைச் சைவரும், அவர்கட்குக்
கீழ்ப்படிந்து வாங்கித் தரித்துக் கொண்டு, அந்த ஸ்மார்த்தர்களையும் ஈஸ்வர
னுகப் பாவித்துக் கும்பிட்டு விடை பெற்றுச் செல்வதை யுணராதார் யாவர்?

"அத்வைதி" என்பார் வாதத்திற்கு, பிராஹ்மண, க்ஷத்திரிய வைசிய
வருணங்களில், கிரகஸ்தர்களும் சந்நியாசிகளும் வருவார்க ளென் றறிவித்த
னர். வாதம் பதினுன்கு வித்தைக்கு அதிகார முடையோரால் நடத்தப்
படல் வேண்டும். பல் லறையரோ " அந்த விப்ர சிரேஷ்டர் இவர்களோடு
ஒருங்கிருந்து, இவர் சொல்லும் வேத மந்திரங்களைக் காதினுற் கேட்பார்
களா? பிரதி யுத்தரமாக வேத மந்திரங்களைச் சொல்வார்களா? உயர்
குலத்தாரான அவர் இழி குலத்தா ரென் றிகழ்ந்து ஒதுக்குபவ ராகலான்
ஸ்மிருதிகள் மிகத் தாழ்த்திப் பேசுகின்றன. சூத்திரர் வேதஞ் சொல்லப்
பிராமணர் கேட்கலாகா தென்றும், பிராமணர் சூத்திரர்க்கு வேத மந்திரங்
களைச் சொல்லலாகா தென்றும், கண்டிக்கின்றன. கடுந் தண்டனை கூறு
கின்றன" என்று எழுதி யிருக்கின் றமையின், சைவ சித்தாந்திகள் யாவ
ரும் நாலாம் வருணத்தா ரென விளக்கமாகின்றது. பிராமண க்ஷத்திரிய

வைசியர்களா யிருந்து, பதினுன்கு வித்தைக் கதிகாரிகளா யிருப்பின், வைதிகர்களாய வேதாந்திகள் சைவ சித்தாந்திகளோடு வாதத்திற்கு வருவார் களே யன்றி, சூத்திரராய சைவ சித்தாந்திகளோடு வாதத்திற்கு வரமாட் டார்க ளென் றுணர்வாராக.

ஸ்ரீ கோவிலூர் மடாலயாதிபதிகள், தமது வேதாந்தத்தைத் தூஷிக் கும் சைவ சித்தாந்திகளோடு வாதஞ் செய்யும் வேதாந்திகட்கு மத்தியஸ்த ராக நன்கு வருவார்கள். இதுவரைச் சைவர்கள் வேதாந்திகளை நிந்திக்கா மையாலும், இப்பொழுது கலியின் மிகுதியால், ஆஸ்திக நாஸ்திகர்களாய், வேதாந்தத்தினைச் சைவர்கள் தூஷிக்கின்றமையின், அதனை யடக்குவதற் கும், தமது மதத்தைப் பாதுகாத்தற்கும் உடன்படுகின்ருர்க ளென் றுணர்க. "மத்தியஸ்தர்" என் றெழுதி யிருக்க, அதனை யுணர்ந் தவ்வளவில் வின வாது, "வாதிப்பவராய் உபகாரஞ் செய்பவராய்" என்று எழுதி யிருக்கின் றமையின், "அதிகம்" என்னுந் தோல்வித் தானத்தை யடைந்தனர்.

தேவி கோட்டை ஜெமீந்தார் ஸ்ரீமான் அள. அரு. அருணசலஞ் செட்டியா ரவர்கள், ஸ்ரீ செல்லப்ப சுவாமிகளை ஞான குருவாக அடைந்து, வேதாந்த சூடாமணி, கைவல்ய நவநீதம், ஞான வாசிட்டம் முதலிய நூல் களை முறையாகப் பாடங் கேட்டு, அதிற் கூறியபடி, ஜீவப் பிரஹ்ம வைக் கியத்தினைக் கைக்கொண்டு, நாடோறும் வேதாந்தியா யொழுகுபவ ராயிற் றே! அவர்கள் தாம் கைக்கொண்ட வேதாந்தத்தினைத் தூஷிக்கும் சைவ சித்தாந்திகளை யடக்குதற்கு மத்தியஸ்தராக அவசியம் வருவார்கள். "வா மாட்டார்கள். நாம் நம்பமாட்டோம்" என்கின்ருர். ஆயின், இவரையும், இவரைச் சார்ந்தாரையும், வேதாந்திகளை மாயாவாதிக ளென்றும், வேதாந் தத்தைப் பௌத்த நூ லென்றும், வேதாந்திகளுக்குச் சபையில் சமணர் போல் இருக்கும்படி யிடங் கொடுங்க ளென்றும், இன்னும் பலவாறு தூஷிக்கும்படியும் ஆஞ்ஞை செய்வார்களோ? அவர்கள் சைவர்கள் முன் னிலையில், "வேதாந்திக ளாய எங்களை, மாயா வாதிக ளென்று சொல்லல் தகா"தென் றறைபவர்க ளாயிற்றே! அவர்கள் அறையைப் பெற்று மௌ னமா யிருக்கின்றனர் அளவிறந்தனர்.

கோவிலூர் மடாலய அபிமானியாய ஸ்ரீமாந். சித. முரு. முருகப்ப செட்டியா ரவர்கள் ஸ்ரீ வீரசேகர ஞான தேசிகப் பெருந்தகையா ரிடத்து அன்பு பூண் டொழுகிக், கோவிலூர் மடாலயத்தினைச் சாராதவர்கட்கு வருந் தீமையினைத் திருப் பாதிரிப் புலியூரில் முடி புரை கூறிய காலத்துக் கூறியிருக்கின்ருர்கள். அங்ஙன மிருக்க, அவர்கள் வேதாந்தத்தினை, ஆஸ்திக நாஸ்திகராய்த் தூஷிக்குஞ் சைவ சித்தாந்திகட் கிடங் கொடுப்பார் களா? எவரிடத்துச் சிவ தீக்ஷை பெற்ருர்கள்? வைதிகர்க ளிடத்தா? அவைதிகர்க ளிடத்தா? 'நம்ப முடியாது" என்ருர். 'அத்வைதி' யென் பார் சாக்கை மடாலயத்தில், அவர்களைச் சந்தித்து, அவர்கள் சம்மதத்தின்



மீது, வாத வரை யறைப் பத்திரிகை வெளியிட் டிருக்க, அதனை யிவர் ஏன் நம்புவர்? நம்பார். நம்பார்.

" பசு மலை, யானை மலை போல் மடங்களு மிருக்கின்றனவே " என் கின்றனர். இதனுல், மடத்திற்கும் புகழுக்கும் தீவத்திக்கும், ஆசைப் பட்டா ரொருவர், வயிற் றெரிச்சலால், கோவிலூர், காளையார் கோவில் முதலிய மடங்களைக் குறிப்பா யெழுதிய தாம். வேதாந்திகளது மடாலயங் களும், பாசமாகிய சைவ சித்தாந்திகளது மடாலயங்களும், கிரகஸ்தர்க ளுடைய கிரகங்களும், யானை மலை போலும், பசு மலை போலும், உந்நத மாய்த் தான் இருக்கின்றன. இன்னுங் கிறித்துவர் கோவிலும், பள்ளிக் கூடங்களும், அவ்வாறேதா மிருக்கின்றன. ஆகலின், சடப் பொருளுக் கும் வாதத்திற்கும் யாது சம்பந்த முளது?

"பாண்டியனது அவைக் களத்திலே சமணர்க்கும் இருக்கைகள் கொடுத்தாங்கு, இவர்க்கும் இருக்கைகள் கொடுக்கப்படும்" என்கின்ருர். இது சுவ பக்ஷ விகடக பர பக்ஷ ஸ்தாபநத்திற் குரிய நல்லுதாரணமாம். எங் ஙன மெனின்:—பாண்டியனது அவைக் களத்தில் ஸ்ரீ சம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள், த்விஜ வருணத்திற் பிறந் திருந்தமையின், உயர்ந்த ஆசந மும், சமணர்கள் தாழ்ந்த வருணத்திற் பிறந்தவர்க ளாகலின், தாழ்வுடைய ஆசநமுங் கிடைத்தாங்கு என்ற திருஷ்டாந்தம் போன்றே, இவர் கூறிய படி யுயர்ந்த வருணத்தா ராகிய வேதாந்திகட்கு உயர்ந்த ஆசநமும், தாழ்ந்த வருணத்தாராகிய சைவ சித்தாந்திகட்குச் சமணர் போல் நிற்குந் தன்மையும், பெறவேண்டிய தவசியமே. அதனு லன்றோ இத் திருஷ்டாந் தம் வரைந்தனர். இன்ருயின், விரோத திருஷ்டாந்தத்தை வரைவரா? இவர் மதிமா ஞயிற்றே! அவர் என் செய்வார்? நினைப்பின் வண்ணமே யெழுதினர். இவர் சாலச் சிறந்தவர்.

" அவர்களை நாம் சந்தித்து வேண்டு நிர்ணயங்கள் செய்து கொள் வோம்" என்று இவர் எழுதுகின்றமையின் " காசி வாசி ஸ்ரீமத் செந்தி நாதையர், ஸ்ரீ அம்பலவாண நாவல ஸ்வாமி, ஸ்ரீ ஸ்வாமி வேதாசலம், யாழ் ப்பாணத்து ஸ்ரீ சுவாமி நாத பண்டிதர், மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவ நூற் பரிசோதகர் - ஸ்ரீ சுப்பிரமணியக் கவிராயர் என்பவராற் சபை கூட் டப்பெறும்" என்று " சைவசித்தாந்தி " என்பவர் அறிவித்த ஜீவர்களுள் ஒருவ ரிவர் என்பதும், தற்காலம் தேவி கோட்டையில் வசிக்கின்ரு ரென்பதும், விளக்கமாகின்றது. அவர் எவராயினு மாகுக.

முத்தியிற் ஜீவாத்மாவும், சிவனும், அயுத சித்த சம்யோக சம்பந்த மென வடமொழிப் பெய ருடைத்தாய், ஒரு குழூஉக் குறியார் தென்மொழி யில் வழங்கும் அத்துவித சம்பந்த மென்னும் சம்பந்த முடையதா யிருக்கும் என்னும் இவர், துவைத நிலை கொள்பவ ரன்றி வேறு யாவர்? ஜீவன், சிவன், பாசமாய சர்பந்தம், ஜீவாந்தக் கரணம், சிவ திருவடி, இச்சையாதி

யுடைமையின், முத்தியின் முப்பொரு ளங்கீகரிப்பவ ராயிற்றே? ஒன்றுக்கு மேற்பட்ட முப்பொருளை யங்கீகரிப்பவரைத் துவைதி யென்று சொல்வதா? ஏகான்ம வாதி யென்று சொல்வதா? கூறுக.

“முத்தி நிலை யத்துவிதமா யிருப்பதோ? ஏகமாக யிருப்பதோ? என்று நூல்களா லாராய்ந்து துணிவு பெறல் வேண்டு” மென்கின்றார். முதலில் நூலால் முத்தி நிலை நிர்ணயஞ் செய்யப்பட்ட பின், வாதத்திற்குப் போக வேண்டுவ தின்றே! நூலால் நிச்சயம் பெறுமையா னன்றோ வாதித்து நிச்சயிப்பதற்கு வாத சபை ஏற்படுத்துவது. வாதத்திற்கு முன்னரே நிச்சயம் பிறந்து விட்டால் வாதஞ் செய்வானேன்? இவ்வாறு சொல்லி விடுவோமாயின் வேதாந்திகள் சாமானத்தை யடைந்து அறைவார்கள். அவ்வறையைப் பெற்றுச் சுகமாகக் காலங் கழிப்போ மென்று கருதினர் போலும்.

“வேதாகம முதலிய மெய்நூல்களின் கொள்கை சைவ சமயமோ? மாயா வாதமோ? என்பதும்” என்கின்றார். 25 தத்துவத்தினை யங்கீகரிக்கும் மாயா வாதக் கொள்கை யுடையாரோடு வாதஞ் செய்யக் கருதின், சாங்கிய மதத்தருடன் கூறிப் பதி லறை பெறுவா ராக.

“ஆரியன்”.

உ

சிவமயம்.

மாயா வாத த்வைத மலத் தடிப் பேறிய

சைவ சித்தாந்தி அங்குசத்தைத் தகர்த்துத்

## தவிடு பொடியாக்குஞ் சம்மட்டி.

சைவ சித்தாந்தியாரே!

சொ. செட்டியாருக்குப் பரிந்து, “உள்ளபடி யறைதல். பொய்யுரை மறுப்பு” என்ற இரு பத்திரிகையை, “நல்லொழுக்க நயந்தோன். உண்மை யுரைப்போன்” என் றிருபெயர் புனைந்து, எழுதியவர், “துராசாரர்க்குச் சிக்ஷை” என்று, ‘துவைத சைவ துர்வாத கோளரி’ யென்பவரால், எழுதப்பட்ட பத்திரிகையால், ஒழுக்கம் பலருக்கும் வெளிப்பட்டு ஓடி யொளிந்தன ரென்ப துல கறியுமே!

“எம்மவர் பிரயோகத்தையே நீவி ரேற்று வந்ததால்” என்றீர். நுமது புத்தி வியக்கற் பாலதே! நீவி ரிற்றை வரை யிங்கிருந்திலீர் போலும்.



நும்மவர் “அறைதல்” என்று பெயர் புனைந்தார். ‘அத்வைதி’ யென்பார் “அறை” யென்று பெயர் கொடுத்தனர். விகுதி குறைந்த முதனிலைத் தொழிற் பெயரும், விகுதியோடு கூடிய முதனிலைத் தொழிற் பெயரும், ஒன்று என்னும் அபேத மென்பீரேல், நுமக்குப் பேதந் தோற்றுவது யாண்டு? இவ்வாறு கூறும் நீவிர் தமிழ் நெடுங் கணக்கி லுள்ள வரிவடிவ வெழுத்துக்களைச் சைவ சித்தாந்திகள் முதலி லெடுத் தாண்டமையின், பின் சமாதானப் பத்திரிகையில் ‘அத்வைதி’ யென்பார், அவ் வெழுத்துக்களையே, யெடுத் தாண்டன ரென்றும், அவற்றை யெடுத்தே யாமும் ஆண்டோ மென்றுங் கூறினுங் கூறுவீர். நுமது கல்வியின் றிறனைக் கற்றார் காண்பாராக!

நீவி ரெழுதிய அங்குசப் பத்திரிகைக்குப் பிரமாணங் காட்டுதற்கு, நீவி ரெழுதிய “அத்வைதிக்கு அறிவிப்பு” என்ற பத்திரிகையையே, வேதம் போன்று மேற்கோளாக ஒப்பியதனை, நல் லுணர்வோ ருணரின் நகையாடுவ ரென்று றுணர்க!

“சைவ மடாலயத்தில் நிரீச்சுர வாதிகளாய மாயா வாதிகளைக் கொண்டு” என்றும் “நாஸ்திகர்” என்றுங் கரைந்தீர். உமா சகிதராய ருத்திரருக்கும் மல முண் டென்றும், அவரை யீசுர ரென்று ஒப்பாது சீவ னென்றும், ஈஶ்வரன் கூறிய வேதத்தினை முழு மனதோடு கொள்ளாது இகழ்ந்து கொள்ளும் நீவிரும் நும் மதத்தினரும், நிரீச்சுர வாதிகளும் மாயா வாதிகளும் நாஸ்திகரும் ஆவீ ரன்றி, வேதாந்திகள் ஒரு போதும் நிரீச்சுர வாதிகளும், மாயா வாதிகளும், நாஸ்திகர்களும் ஆகார்! ஆகார்!!

அசுத்த சைவ ரென்றாற் பய னுறுகின்றீர். திருமந்திரம், **1423-1424**-வது செய்யுட்களில், காதின்கண் பொன் கடுக்கனும், திருமேனியி லிரண்டு பொன் வடங்களும், இரண்டு குண்டலங்களும், இன்னும் ஏனையவற்றையுந் தரித்து, அத்துவா சோதனை செய்பவர், “அசுத்த சைவர்” என்று கூறி யிருக்கின்றமையின் ஸ்ரீ மூல நாதரை வெகுளுவீராக!

“ஒவ்வொரு நகரத்தாரும் நுங்களை யடக்கத் தக்க முயற்சி புரிந்து கொண்டிருப்பதை நீவி ரறியீ ராதலின்” என்றீர். இதனால், ஒவ்வொரு நகரத்தார்க ளிடத்தும், நீவிரும் நும்மைச் சார்ந்தாரும் சென்று, “வேதாந்திகளைப் பத்திரிகை யச்சிடா திருக்கும்படி, செய்யுங்கள்” என்று இரக்கின்றீர்க ளென்பது விகவித மாகின்றது. நும்மவரது செய்கை, திருப்புத்தூர்ப் புராணப் புரட்டு, சுவாநுபவத் திரு வாக்குப் புரட்டு, விநாயக புராணப் புரட்டு, முதலிய புரட்டுக்களேயா மென்று, வேதாந்திக ளச்சிட்ட, பல பத்திரிகைகளால் நகரத்தார்கள் யாவரு முணர்ந்து கொண்டமையின், இன்னும் மறைவா யுள்ள புரட்டுக்களையும், அச்சிட்டு வெளியிடின் அவமானமாம் என்று கருதி நாடோறும் நகரத்தார்களைப் பத்திரிகை

யச்சிடா திருக்கும்படி ஏற்பாடு செய்யுங்க ளென்று இரந்து முயற்சிக்கின் றீர் போலும்.

'அத்வைதி' யென்பார் அறிவித்தாங்கே, சபை கூட்டுவோராய அஞ் சுவரும் வேதாந்தப் பெரியாரைக் கண்டு அஞ்சுவ ரென்றே யங்கீகரித்து, அதற்குச் சில காரணங் கரைந்தீர். அஃதறிஞர் அறியற்பாலதே.

'ஆசாரி' என்னும் பதமும், 'ஆசாரியர்' என்னும் பதமும், ஒரு பொருளை யுடையன என்பதை ஆரியங் கற்றிருப்பின் அறிய வல்லீராவீர். ஆசாரியத் தன்மை யுடையோன் 'ஆசாரி' யென்பது, "அலரி" என் னும் பதம் போன்றதாம். அதனால் நீவிர் பதப் பொரு ளுணராது, நீவிர் கருமான் றொழிலைக் கைக் கொண்ட ஆசாரியா யிருந்தமையா னன்றோ, நும தநுபவத்தைப் பிறர்மீ தேற்றி 'ஆசாரி' யென்று கூறினீர். அது நுமக்கே சாலும்.

" திரு வாவடு துறை யாதீநத்துச் சைவப் பிரசாரகர் பொ. முத்தைய பிள்ளை யவர்கள் கடாவிய கடாவைக் கண்டீராயின் " என்றீர். " சூட்டுக் கோலாற் சூடுண்டு, துள்ளி யெழுந்த தூத்துக்குடி முத்தைய பிள்ளை, கடாவை யடக்குங் கட்டாரி " என்னும் நூலைக் கண்டீராயின் நீவிர் புகழா தடங்குவீர். அவரை நுமது சார்பின ரென்று கருதுகின்றீர். அவர் வேதாந் தத்திற் கூறும் ஒரு பொருளும், நீவிர் கூறும் முப்பொருளும், கைக்கொள் ளாது, இரண்டினையுஞ் சமரசப் படுத்துவதற்காக, கடாவின் 12-ம் பக்கத் தில் " முத்தியி லுயி ருண்டு மல மில்லை " என்றும், " பாசம் நில்லாமை பற்றியே பாசம் அநித்திய மெனப்படும் " என்றும், "இவ்வாறே சிவ ஞாந போத முதலிய சித்தாந்த சாஸ்திரங்கள் போதிக்கின்றன " என்றும், பொறித்து, " முத்தியில் முத்தாத்மாக்களுக்குப் பதியும் பசுவு முண்டே யன்றிப், பாசம் இல் பொருளா யிருக்கின்றது " என்றும், " சைவ சித் தாந்த சாஸ்திரங்கள் இரு பொருள் நித்திய வாதங்கள் " என்றும், பலவா றும் கூறுபவ ராகலின், அவர் நும்மைச் சார்ந்தவ ரன் றென்று, இனி யேனு முணர்வீராக !

ஸ்ரீ காசிகாநந்த சுவாமிக ளெழுதிய சூட்டுக் கோலில், சொ. செட் டியா ரெழுதிய வாக்கியங்கட்குச் சமாதாந மெழுதி யிருக்க, அதனை யுண ராது பொய்க் கதைகளைப் பலவாகப் புனைந்து, வசை மொழி புகன்றீர். செட்டியார் இராம நாத புரம் சப் கோர்ட்டு 1908ஹூ 140-ந டிகிரிப்படி, கடனுக்காக, காரைக்குடி மெ. செ. அ. பழநியப்ப செட்டியாரால் வாரண் டில் பிடிக்கப்பட்டு, பின் சொற்பத் தொகை கொடுத்து, ராசிநாமா செய்து கொண்டார் என்று சூட்டுக் கோலில் யாண்டேனு மெழுதி யிருக்கின் றார்களா ?

" ஆகமத்தினைப் பிரமாணமாகக் கோடல் வேண்டும். அது பரம சிவன் வாக் கன்றோ " என்கின்றீர். அங்ஙனமாயின் வாமாகமம் பரமேஸ்



வரன் வாக்கானமையின் அதனையுங் கொள்ளல் வேண்டும். ஈஸ்வரனைக் கொள்ளுபவர்களுள் ஒருவராய நீவிர், அவர் கூறிய வாமாகமத்தையுங் கொண்டு, அவ்வா றநுட்டிப்பீ ராக !

" மற்றைய பதிப்புக்களும், எட்டி லுள்ளனவும், புரட்டப் பட்டன " என்று அடங்கன் முறை முகவுரை, பரிபாடல் முகவுரை முதலியன கூறு கின்றன. தேவார திரு வாசகங்களில், ஜீவர்களையே பிரஹ்மம் என்னுஞ் சிவ ரூபமாகக் கூறி யிருப்பதனு லன்றோ, நீவிரும் நும் மதத்தினரும் 'வேதத்தின் ஞாந காண்டப் பொருளை விளக்குகின்றன' என்று கூறு கின்றீர்கள். இன்றாயின், " ஆகமத்தின் ஞாந காண்டப் பொருளை விள க்குகின்றன " என்று கூறுவீ ரன்றோ ? திரு வாசகத்திற் குரிய வீர சைவ பரம்பரை, புதுச்சேரி அம்பலத்தாடி சுவாமிக ளாதீநம், நுமது திரு வாவடு துறை யுண்டானதற்குப் பின்னோ ? திரு வாவடு துறை மடத்து இடம் ஸ்ரீஅம்பலத் தாடி ஸ்வாமிக ளாதீநத்திற் பெற்ற தாயிற்றே. திருப் பெருந் துறை தேவஸ்தாநம் ஷ யாதீநத்திருந்து, சின்னாண் முன்னர் திரு வாவடுதுறை யாதீநத்தாற் பெற்ற தாயிற்றே. சிதம்பரம் சிவ கங்கை யில் திரு வாசக ஏட்டைப் பெட்டியுள் வைத்து விடுங்கால், நும்மவரிடத்து வராது, அம்பலத்தாடி ஸ்வாமிகளிடத்து வந்த தென்னை? அதனு லன்றோ, அவர்கட்கு நட ராஜாவின் பெயராகிய 'அம்பலத் தாடி' என்னும் பெயர் கிடைத்தது. அவர்கள் சிற் சபைக்குட் செல்வது போன்று, நும்மவர் செல்ல லேலுமோ ? இக் காரணம் பற்றி யன்றோ, சமஸ்கிருதத்தி லுள்ள சரித்திரமும், ஸ்ரீ மாணிக்க வாசக ஸ்வாமிகளை வீர சைவ ரென்று கூறு கின்றது. திரு வாவடுதுறையிற்றான் மதுப் பிரிய ரிஷி தவஞ் செய்து, வேதாந்திகளாய சந்நியாசிகள் வசிக்க வேண்டு மென்று வரம் பெற்றனரோ? சிவ ஞாந பாஷிய முற்றும் திரு வாவடுதுறையி லன்றி, யேனைய விடத்தி ராமை போல, சிவாநந்த பாஷியமும் உரியாரிடத் திருக்கின்ற தென் றுணர்க ! நீவிர் கூறிய வசை மொழி யாவும், நும் மதத்துத் துறவிக ளிடத்து மில்லறத்தா ரிடத்துமே யுண்டென் றுணர்க !

" நுமது சந்நியாசிகளது பெருஞ் செயல்களைத் தேவி கோட்டையில் நீவிர் குறிப்பிட்ட தந வைசிய சிகா மணிக ளிடம் யாந் தெரிவித்துக் கொள்ளல் வேண்டுமோ " என்றீர். இதனால், வாதத்தை விடுத்து, அவர்க ளிடத் தில்லாத செயலைக் கற்பித்து, அதனைத் தெரிவிக்க வேண்டுமோ ?, என்று கூறுகின்றமையின், " அர்த்தாந்தரம், அதிகம் " என்னுந் தோல் வித் தாநங்களை யடைந்தீர்.

" இத்தகைய சந்நியாசிகளோடு வாதிட யாங்கள் பின்னிடக் கூடா தாம் " என்று எழுதிய வாக்கியமும், அத் தோல்வித் தாந முற்ற தறிவீ ராக !

" முற் காலத்தில் சைவ சமய கோளரி யாகிய திரு ஞாந சம்பந்த மூர்த்தி நாயனரால் " என்கின்றீர். முற் காலத்தில் 'அவைதிக' சைவ

சமயத்தின் 'கொள்கை-குற்றம்' எனப் பொருடரும் கோளை, 'நாசஞ் செய்வோன்' எனப் பொருடரும் அரியாக, ஸ்ரீ ஞாந சம்பந்த சுவாமிகள் விளங்கினார்க ளென்பது, அவர்களா லியற்றப்பட்ட தேவாரச் செய்யுட்கள், ஆகமப் பொருளை விளக்காது வேதப் பொருளை விளக்குகின்றதனானே போதரும். இதனா னன்றோ, 'பரசமய கோளரி' யென் றெழுதாது ,சைவ சமய கோளரி' யென் றெழுதினீர். நீவிர் மிக்க மதியுடையீராவீர். விரிப்பிற் பெருகும். அமைக.

"கிருஷ்ணன்"

சற்குருப்யோ நம:

## வேதாந்திகள் ஜயக் கொடி.

அறிவிற் சிறந்த அன்பர்களே !

சைவ சித்தாந்திகளோடு வாதஞ் செய்வதாக "அத்வைதி" என்பார் வெளியிட்ட பத்திரிகைக்கு மறு மொழி கூறுவது போன்று வீண் வார்த்தைகள் பலவற்றைச் சைவ சித்தாந்திகள் கூறிக் காலத்தினைக் கழிக்கின்றனர். அது வாதத்திற்கு வரமுடியா தென்பதனை அறிவிக்கும் சின்னமாம்.

ஆகலின், அதனை யுணர்ந்து தேவி கோட்டை ஜமீந்தார் அழ. அரு. அருணாசலஞ் செட்டியா ரவர்கள், காரைக்குடி மெ. செ. சொக்க லிங்கச் செட்டியா ரவர்கள், சா - லெ - செட்டியப்ப செட்டியா ரவர்கள், அழ - சித - சொ - சொக்கலிங்கச் செட்டியாரவர்கள், மூ. து. சித. சிதம்பரஞ் செட்டியா ரவர்கள், பழ. வெ. ராம. ராம சாமி செட்டியா ரவர்கள், பெரி-க - பழநியப்ப செட்டியாரவர்கள், சித - நா - நாராயணஞ் செட்டியாரவர்கள், அரு. அ. அரு. ராம. அருணாசலஞ் செட்டியா ரவர்கள், முதலியோர்களாலும், இன்னும் பலருடைய முயற்சியினாலும், சைவ சித்தாந்திகள் தைமீ 30உக்குள் சபை கூட்டாதிருப்பா ராயின், காரைக்குடி மேல மடாலயத்தில், "வேதாந்திகள் ஜயக்·கொடி" என்னும் பெயருடன் சபை ஒன்று காளயுக்திஸு மாசிமீ 1உ முதல் 5உ வரை ஐந்து திநமும் செவ்வனே நடைபெறும். அதில் வித்வத் சிரேஷ்டர்களாகிய வேதாந்திகள் அநேகரால், தம் மதத்தின் ஜயத்தினை அறிவிக்கும் வாயிலாய், வேதாந்த விஷயங்கள் பலவற்றையும் சபைக்கு வரும் யாவர்க்கும் விளக்கமாக வாத முறையாற் கூறப்படும்.

அச் சமயம் மத வாதிகள் வந்து தங்கள் பக்ஷத்தினை நிலை நிறுத்தும் ஆற்ற லுடையவராயின், அக்கிராசநாதி பதியின் ஆஞ்ஞையினைப் பெற்றுச் சபையில் வந்து தம் பக்ஷத்தினை நிலை நிறுத்துவாராக.

இவ்வாறு, செய்யாது முன் ஆடிமீ கோவிலூரில் சபை நடக்கும் வரை மௌந விரதம் பூண்டிருந்தும், சபை நடந்தது தெரியா தெனக் கழ



றிக் கொண்டும், வேறு பல காரணங்களைக் கரைந்து கொண்டும், சபை முற்றுப் பெற்ற பின் மத வாதிகள் போன்று சிலர் வெளிக் கிளம்பிப் புரட்டுப் பத்திரிகைகளை அச்சிட்டது போலச் சபை முடிந்த பின் அச்சிடுவாராயின், அஃதறிஞ ரருவருக்கத் தக்கதாம் என் றுணர்வீர்களாக.

கோவிலூர், பிர்ம வித்தியாப் பிரசாரண சபைக் காரியதரிசி.

## ஓர் எச்சரிக்கை.

அன்பர்காள் ! உண்மை யுணருங்கள் !

காரைக்குடி, ஸ்ரீமத் அறு பத்து மூவர் மடச் சொக்க லிங்கச் செட்டியார்க்கும், வேராந்திகட்கும் நோடீஸ் வாயிலாகவும், புத்தகங்கள் வாயிலாகவும் வாதங்கள் நடந்து வந்தன. அச்சமயம், ஷெ செட்டியார் காரைக் குடியில் சைவ சபை வைக்கின்றோ மென்றும், வேதாந்திகள் வாதத்திற்கு அங்கு வரவேண்டு மென்றும், சைவ சித்தாந்தி யென்று கைச்சாத்திட்டு ஓர் அறிக்கை வெளியாக்கினர். அதற்கு வேதாந்திகள் யாங்கள் வாதத்திற்கு வருகின்றோ மென்று சம்மதித்து ஓரறிக்கை வெளியாக்கினார்கள். சைவ சித்தாந்தி யென்று கைச்சாத்திட்டவர் வாத சபையை யாது காரணத்தாலோ கூட்ட வில்லை. அதன்மீது, வேதாந்திகள் காரைக் குடியில், காளயுக்திஸு மாசிமீ 1உ முதல் 5 திநம் வாத சபை நடத்துகின்றோ மென்றும், ஆண்டுச் சைவ சித்தாந்திகள் வாதத்திற்கு வரலா மென்றும் இரண்டு மாதங்களுக்கு முன்னரே அறிக்கை செய்திருக்கின்றார்கள். அவ்வாறே, அச் சபைக்கு வந்து தம் பக்ஷத்தை நிலைநிறுத்து மாற்ற லின்றியதற் கறிகுறியாக, மேற்படி சைவ சித்தாந்தக் கக்ஷியார் தேவி கோட்டையில் சபை வைத்து, தைமீ 21உ முதல் மூன்று திநம் நடத்துவதாக அறிக்கை செய்திருக்கின்றனர். வேதாந்திகள் சைவரை வாதத்திற் கழைத்திருப்பது போன்று, சைவர்கள் தம் சபைக்கு வேதாந்திகளை வாதத்திற் கழைத்திருத்தல் வேண்டும். அவ்வா றவர்கள் செய்யாதது அவர்கள் மத துர்ப் பலத்தைக் காட்டுவதாம் ; மேலும் அஃது அறிஞர் கடமையும், வாத வொழுங்கு மன்றாம். வேதாந்திக ளறை கூவி யிருக்குஞ் சபைக்குச் சென்று வாதிக்கும் ஆற்ற லின்றியவர் சபை கூடிப் பேசுவது ஏழைச் சைவரை யேமாற்றும் பொருட்டேயாம். மேற்படி சைவ சித்தாந்த சபைக்கு உபந்யாசங் கேட்கச் செல்லும் யாவரும், அவ் வுபந்யாசகர்கள் யாவர்க்கும், காரைக் குடியில் கூடும் வேதாந்திகள் சபைக்குத் தாங்கள் போய் நேரில் வாதஞ் செய்வீர்களாக வென்று பிரேரிப்பாராக! மேற்படி சைவர்கள் வேதாந்த சபைக்கு வாதத்திற்குச் செல்லாது, சபை கூடிப் பேசுவது எழைத்தனமும், கோழைத்தனமுமாம்.

அ. பெரிய சாமி முதலியார், சென்னை.

உ சிவமயம்.

## சைவ சித்தாந்த மாயா வாதி சாமி யையா தேசிகரின்
## மித்தியா பாஷணம்.

அறிவிற் சிறந்த அன்பர்களே!

தேவி கோட்டையிலும், காரைக் குடியிலும் தத் காலம் வந்து வசிக்கும் அசுத்த சைவ சித்தாந்திகள் பலரும் மாறு கைச்சாத்திட்டு வேதத்தினையும், வேதாந்தத்தினையும், வேதாந்திகளையும், அளவு கடந்த தூஷணை செய்தனர் என்பது உலகறியுமே. வேதாந்திகள் அவர்களை வாதத்திற்கு வருமாறு அழைப்புப் பத்திரம் வெளியிட்டவுடன் அவர்கள் கும்பகோணம் முதலிய இடங்களிற் பதுங்கிக் கொண்டனர். நிற்க, சாமி ஐயா தேசிகர் என்பார் மாயா வாதிகளின் தோல்வித்தாநம் என்றொரு துண்டுப் பத்திரம் அச்சிட்டுத் தேவி கோட்டையில் மாத்திரம் அறிக்கை செய்தனர். அவர் கூற்றுப் பொய்யேயாம். "சைவ சித்தாந்திகள் அங்கு வந்து சந்தேகந் தெளிந்து கொள்ளலா மெனவும் ஓர் விளம்பரம் அச்சிட்டு இவ்விடங்களிற் காட்டாது தூரத்தில் சிற்சில விடங்களில் ரகசியமாகக் கொடுத்தனர்" என்கின்றார். மார்கழி மாதம் முதற் றேதியே 3000-ம் பத்திரிகைகள் அச்சிட்டுத் தேவி கோட்டை, காரைக்குடி, கோட்டையூர், மதுரை, சென்னை முதலிய எல்லா விடங்களிலும், யாவருக்கும் தெரியுமாறு லோகோபகாரிப் பத்திரிகையிலும் நோட்டீஸ் வைத்தனுப்பி யிருக்கப் பொய் புகலுகின்றார்.

சைவர்கள் செய்யும் நிந்தை காதினாற் கேட்கக் கூடாததா யிருக்கின்றதெனக் கருதியே வேதாந்த சபையைப் பல விடங்களில் ஸ்தாபித்து வேதாந்தத்தின் உண்மையைப் பல விடங்களிலும் விளக்கி வருகின்றார்கள்.

சிறு துண்டுகளிலும் - சபை நடைபெறும் முறைப் பத்திரிகையிலும் வேதாந்திகள் சைவ சித்தாந்த சபைக்கு வாதற்திற்கு வரலா மென்று அறிவித்திருப்பதாகப் பொய் புகலுகின்றார். பூர்வ பக்ஷிகள் சங்கை செய்தால் உத்தர பக்ஷிகள் உத்தரங் கூறுமாம். அவ்வாறாய பூர்வ பக்ஷிகள் சங்கைக்கு, உபந்யாசகருக்கும் அக்கிராசனாதிபதிகட்கும் உத்தரங் கூறத் தெரியாமையின் வேறு தெரிந்தோர் வாயிலாக உத்தரங் கூறுவிப்பாராம். சிவாகமத்துக் குரியவரே பூர்வ பக்ஷிகளாம். அப்பூர்வ பக்ஷிகள் ஆசங்கைகளை மனு வாயிலாக அறையின் அதனைப் பெற்றுச் சின்னாட் பின்னர் மறு மொழி வேற்றோரால் கொடுப்பாராம். என்னை அழகு பாருங்கள்!

சைவ சபைக்கு வந்த புலவர்கள் ஆங்கில சுருதிப் பிரமாணத்தால் சைவத்தைச், சபைக்கு உபந்யாசங் கேட்க வந்த முப்பத்தைந்து பேருக்கு முன்னர் நாட்டினராம். அசைவர்கள் சபைக்கு, வேதாந்திகள் அழைக்கா திருக்கும்போதே அச்சபைக்குச் சென்று கதவைத் தாழிட்டுக் கொ



ண்டு உபந்யாசஞ் செய்வோரைத் திறக்கும்படி செய்து உட் சென்று வாதஞ் செய்ய வேண்டுமோம். அங்ஙனஞ் செய்யா திருந்தது வேதாந்திகளின் ஆண்மைக் குண மின்மையினை அறிவிக்கின்றதா மென்று அசுத்த சைவ சித்தாந்தியாகிய சாமி ஐயா தேசிகர் பிறர்க்காகப் பறை கொட்டுகின்றார். என்ன அறியாமை பாருங்கள்! வேதாந்திகள் அழைத்த விருந்திற்குப் போகாது கும்பகோணம் முதலிய இடங்களில் சைவர்கள் பதுங்கிக் கொள்வார்களாம். சைவ சித்தாந்திகள் அழையா விருந்திற்கு வேதாந்திகள் செல்ல வேண்டுமோம். என்ன யோக்கியதை பாருங்கள்!

பூவாளூர் மாயா வாதியாகிய சாமி யையா தேசிகர் ஆண்மைக் குணமுடையவராயின் தேவி கோட்டை, காரைக் குடியில் பதுங்கி யிருக்கும் மான்களையும், கும்ப கோணம் மறைந்தாரையும் வேதாந்திகள் சபைக்கு அழைத்து வருவாராக.

வாத சபையைக் கூட்டி வேதாந்திகளை வாதத்திற்கு அழைக்காமலும், பல்லறையர் முகத்தறையாலும், சைவ சித்தாந்தி அங்குசத்தைத் தகர்த்துத் தவிடு பொடியாக்குஞ் சம்மட்டியாலும் மாண்டும் தேவி கோட்டை நச்சுஞ் சைவ மடக் கூட்டத்தை வாதக் கூட்ட மாக்காமலும் ஓடி கும்ப கோணம், ஆச்சாபுரம் முதலிய இடங்களில் மறைந்து "வேதாந்திகள் ஜயக் கொடி விச்சேதநம்" என்றொரு பத்திரிகை வெளியிட்டும், உறைத்த பல்லறை யொன்று வெளிவரு மென்றும், அறியாச் சாமி ஐயா தேசிகர் பெயர் புனைந்து, தென் தேயத்தாரை "மாயா வாதிகளின் தோல்வித்தாநம்" என்று ஒரு துண்டு அறிக்கை அறிவிக்குமாறு பிரேரேபித்தும் நிற்றல் பேடிமைக் குணமுடைய கீழோர் குணமாம்.

கும்ப கோணம் போய் மறைந்த யாழ்ப்பாணத்தார், நம் நகர வைசியர்களிடம் பொருள் வாங்கித் தாம் சீவித்ததனையும், சீவிக்கின்றதையும் உணராது நாட்டுக் கோட்டை நகரத்தார்களாகிய நம்மை அளவு கடந்து "வேதாந்திகள் ஜயக் கொடி விச்சேதநம்" என்னும் பத்திரிகையில் நிந்தித்திருக்கின்றனர். ஆகலின், நம் நாட்டில் நம்மிட உதவியால் பிழைக்கும் சைவர்கள் நகரத்தார்களை நிந்திக்கும் விஷயத்தினைக் கண்டித்து அவர்கள் யாவரையும் எல்லைக் கப்புரப் படுத்துவதற்கு வைசிய சபை ஒன்று கூட வேண்டு மென்று நம்மவருக் கறிவிக்கின்றேன். இவ்வாறு, செய்யா திருப்போமாயின் இன்னும் சைவர்கள் நம் பொருள் கொண்டே நம்மை நிந்திக்க ஆயத்தமாய் விடுவார்கள், ஆகலின் விரைக.

14-2-1919. ஸ்வாமி நாதன் சேட்டி.

உ சிவமயம்.

சங்கராசார்ய குருப்யோ நம:

## "வேதாந்திகள் ஜயக் கோடி" என்னும் வேதாந்த ஸ்தாபந மஹா விராட் சபைப் பிரகடநம்.

---

முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகண் முழுதகற்று முகத்தி ஞானை
அற்பசுகத் தெனையழுத்தா வைங்கரனைப் பிற்பவமு மகற்றுங் கோவைச்
சொற்பழுது புரியாத வணிகர்குலந் திநம்பணியுந் துணைத்தா ளானைக்
கற்பகத்தின் மிடியகற்றுங் கற்பகமா விநாயகனைக் கருத்தில் வைப்பாம்.

எண்ணுன் கறம்வளர்த்த வெந்தாய் திருநெல்லை
கண்ணுரப் பார்த்த கருணையினுற்—றண்ணருஞ்
சீரக் கடல்வளருந் திங்களைக்கண் டாங்கதுபோற்
காரைக் குடிநகரங் காண். [ஆண்டவர் வாக்கு]

என்று ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிக ஸ்வாமிக ளவர்களாற் புகழ்ந்து கொண்டாடப்பெறும், தந வைசியர்கள் நிறைந்த நாட்டுக்குக் கோட்டை போன்று நடு நாயகமா யிலங்குங் காரை மாநகரின்கண் மகர் நோம்பு (விஜய தசமி) அக்கிரகாரத்தில் ஸ்ரீ சாலி வாடீஸ்வரி நாயக ராஜ கட்க பரமேஸ்வரர் சாக்ஷி கொடுத்து எழுந்தருளி யிருந்து விஜய தசமி யன்று விஜயக் கொடி நாட்டுதற்கு மூல ஸ்தாந மண்டபம் ஆகிய ப. ராம. விஜய தசமி மண்டபத்தில் முன்னர் அறிவித்த வாறே காளயுக்தி௵ மாசிமீ 1உ புதன் கிழமை முதல் (12-2-1919) ஐந்து திநமும் வேதாந்திகள் ஜயக் கொடி என்னும் வேதாந்த ஸ்தாபந மஹா விராட் சபை மாலை இரண்டு மணி முதல் நடைபெறும்.

### ஸ்தாபந நியமநம்.

சங்கர நாராயணர் கோவில் பிரஹ்ம ஸ்ரீ திரு மலை சாஸ்திரிக ளவர்கள்.

பிரஹ்ம சூத்திரம் ஜீவப் பிரஹ்மைக்கியப் பிரதிபாதகமே, அதற்குரியது சங்கர பாஷ்யமே, ஏனைப் பாஷ்யங்களும், ஏனை மதங்களும் சோபாநங்களே.

சிருங்க கிரி மடம் பிரஹ்ம ஸ்ரீ விசுவநாத சாஸ்திரிக ளவர்கள்.

வேதத்தின் கர்ம காண்டம், பக்தி காண்டம், ஞாந காண்டம் மூன்றும் ஜீவப் பிரஹ்மைக்கியப் பிரதிபாதகங்களே.

கோவிலூர் பிரஹ்ம ஸ்ரீ சுப்பிர மணிய சாஸ்திரிக ளவர்கள். வேதங்கள் அத்வைதப் பிரதிபாதகங்களே. ஆகம ஸ்மிருதி புராண இதிகாஸங்களும் அத்வைதப் பிரதிபாதகங்களே.



சிருங்க கிரி மடம் பிரஹ்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிக ளவர்கள், பதி பசு (ஈஸ்வர ஜீவ) ஸ்வரூப மொன்றே நித்தியம். பாச (மாயை மாயா காரியங்) கள் அநித்தியங்களே.

கும்ப கோணம் பிரஹ்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிக ளவர்கள்.

சைவசித்தாந்த ஸ்தாபநாபாச பாசநம்.

காரை மாநகர், கம்ப ராமாயணப் பிரசாரகர் பிரஹ்ம ஸ்ரீ கோவிந்த ராஜய்யங்கா ரவர்கள்.

அபேத திருஷ்டியே ஆநந்தோத்பாதகம். பேத திருஷ்டி பெரும் பீத்யுத்பாதகம்.

நியாய சந்திரரும், வேதாந்த பாஸ்கரருமாகிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சுப்பைய சுவாமிக ளவர்கள்.

கூர்ம புராணப் பிரதிபாத்திய திரிவித பாவனைகளுள் மூன்றாவது பாவனை வேதாந்தமே.

தேவார, திரு வாசக, திரு மந்திரங்களின் பரம ரகஸ்யம்.

உபய பாஷா வேதாந்தப் பிரவர்த்தகாசாரியரும், பரசமய கோளரியாரும் ஆகிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிக ளவர்கள்.

மோக்ஷம் அத்வைதமே. அத்வைத சப்தார்த்தம் ஏகமே. (அன்மைப் பொரு ளல்ல).

வல்ல நாடு ஸ்ரீ சிவ ராம லிங்க ஸ்வாமிக ளவர்கள்.

தேவர், முநிவர், இருடியர், பிராஹ்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர், பிரஹ்ம சாரி, கிரகஸ்த, வாநப்பிரஸ்த, சந்நியாசியர் யாவரும் வேதாந்திகளே.

மற்றுஞ் சில பெரியோர் சிற் சில விஷயங்களை ஸ்தாபநஞ் செய்வார்கள்.

பூர்வ பக்ஷிகள் திநந் தோறும் அக்கிராசநாதிபதி அவர்களின் ஆஞ்ஞையின் மீது செய்யுங்கடா வித்வம்சநம்.

காரைக்குடி மேல மடாலயத்தில் காலையில் ஐந்து திநங்களிலும் பூர்வபக்ஷிகள் கடா வித்வம்சநம்.

இச்சபையில் பூர்வ பக்ஷிகள் பத்திரவாயிலாக மனுக் கொடுக்கவேண்டுவ தில்லை. நேரில் வாக்கினாலேயே கேட்கலாம்.

ஜகத் குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் விஜயப் பவநி வைபவம்.

சுபம் அஸ்து.

கோவிலூர், பிரஹ்ம வித்தியாப் பிரசாரண சபைக் காரியதரிசி.

உ சிவமயம்.

## நாட்டுக் கோட்டை வைசிய நகரத்தார்களுக்கு வெளிப்படுத்தல்.

---

நம் நகரவைசிய நண்பர்காள்!

நம் வைசியப் பிரபுக்களிற் சிலர் யாழ்ப்பாணத்துச் சூத்திரத் திரவிய விருப்புடைய நித்ய மல வாதிகளின் வேண்டுகோட் கிணங்கி, வேதாந்தி

களைத் தூஷித்துப் பத்திரிகை புத்தகங்கள் அச்சிடும்படி சிற்சில யாழ்ப்பாணத்தாரையும், கோவிலூர் மடாலயத்தினை 1896௵ல் தூஷித்துக் கோர்ட்டில் அபராதம் இறுத்த யாழ்ப்பாணத்தார் ஒருவரையும், சிற்சில பண்டாரம் முதலியோர்களையும் ஏவினார்கள். அவர்களும் அதற்கிசைந்து பொருள் நசையால் பல பத்திரிகைகளையும், புத்தகங்களையும் அச்சிட்டனர்.

அங்ஙனம் அச்சிட்டவற்றுள் "வேதாந்தி ஜயக் கொடியை வேரோடறுக்கும் பன்னிரு வினா." என்ற பத்திரிகையும் ஒன்றாம். அதன்கண் கோயிலூர் மடாலயப் பெரியார்களாய ஸ்ரீ முத்திராமலிங்க ஞான தேசிக ஸ்வாமிகள், ஸ்ரீ துறவு ஸ்வாமிகள், ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக ஸ்வாமிகள், ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக ஸ்வாமிகள் என்னும் நால்வரையும், அவர்களிடத்திற் சந்நியாசம் பெற்ற ஏனை நம் குலமணிகளாய் விளங்கியும், விளங்குகின்றவராயுமுள்ள பெரியோர்களையும் சூத்திரர் என்று பலவாறு நிந்தித்து எழுதியிருக்கின்றார்கள். எழுதுபவர் சூத்திரர்களிலுஞ் சாராத யாழ்ப்பாணிகளாதலின், அவருக்கு நம் வைசிய குலப் பெருமை யாங்ஙனம் விளங்கும்? நங் குலத்திற் பிறந்த அவர் யாவரும் சூத்திராரங்கால், வைசிய மணிகளாய நாம் யாவரும் சூத்திராாக வேண்டுமே? அஃதோடமையாது நிந்திக்கப் பொருள் கொடுக்கும் நம் வைசிய மக்களும் சூத்திராாக வேண்டி வருமே? அங்ஙனந் தங்களைச் சூத்திரரென அங்கீகரிப்பாராயினும், ஏனைய வைசிய நகரத்தார்களாகிய நாம் நம்மைச் சூத்திரரென்று அங்கீகரிப்போமா? அங்ஙனம் நாம் அங்கீகரிக்கின், 'செட்டி' என்னும் பெயரினை மாற்றித் தாசன் என்றல்லவா கையெழுத்திடல் வேண்டும்? வைசியம், தந வைசியன் பிரஸ், வைசிய மித்திரன் பிரஸ், வைசிய சிவாநந்த சபை, ரேகை சாஸ்திரங்களில் நம்மை வைசியன் என்று வருதல் முதலியன யாவும் பொய்யென்றங்கீகரிக்க வேண்டுமே? ஸ்ரீ வேதாகம ஹிருதய பூஷணமான பஞ்சாக்ஷர உபதேசமானது தொன்றுதொட்டு நம்மவர்க்கு வைதீகப் பிராஹ்மணர்களால் உபதேசிக்கப்பட்டு வந்திருக்கவும், அதனை நம்மவர்களிற் சிலர் மறந்து துறந்து உபதேச அநர்கர்களான சூத்திரர்களிடத்திற் அவ்வுபதேசத்தினைக் கேட்டதனாலன்றோ, அச்சூத்திரர்கள் நம்மைச் சூத்திரர்கள் என்றெண்ணியதோடமையாது நிந்திக்கவும் தலைப்படுகின்றனர். நண்பர்களே! இன்னும் நம் வைசிய மக்களிற் சிலர் அச்சூத்திரரைக் கொண்டு மத விஷயமான பத்திரிகை எழுதவும் உதவிடின் இன்னும் என்ன தான் சொல்லார்கள்? என்ன தான் செய்யார்கள்?

ஆதலால், வைசிய மக்களாகிய நாம் இனியாவது விழிப்பாயிருந்து சூத்திரச் சைவர்கள் அச்சிடும் பத்திரிகை, புத்தகம், முதலியவற்றில் நம் வைசிய குலத்தினரை யிகழ்ந்தாவது, சூத்திரரென்றாவது, அல்லது, நம்மவர்க்கு ஞானாசாரிய ஸ்தாநமாகிய ஸ்ரீ கோயிலூர் மடாலயத்தினை நிந்தித்தாவது எழுதுவார்களாயின், அதனை யுணர்ந்து 1896௵ பிப்ர



வரி௴ 25௳ விஜயத் துவஜ பத்திரிகையில் நிந்தித்தவரை ராஜ தண்டனைக் குட்படுத்தியாங்கு தண்டனைக் குட்படுத்துதற்கு வேண்டிய யத்நஞ் செய்ய வேண்டுமென வெளிப்படுத்திக் கொள்கின்றேன்.

அழகப்ப செட்டி.

---

உ சிவமயம்.

ஸ்ரீ சங்கராசார்ய குருப்யோ நம:

## உண்மை.

**அன்பர்களே!** —— **உற்று நோக்குவீர்களாக!**

சித்தாந்திகளென்று சொல்லித் திரிகின்ற சிலர் தங்களுக்குச் சிவஞான போத 12 சுலோகங்கள் உடன்பாடென்றும் தாந்திரிகர்கள் என்றுஞ் சொல்லிக் கொள்ளுகின்றார்கள்; அஃதுண்மையாயின், அவர்கள் ரௌரவாகமத்தில் இருப்பதாக ரௌரவாகமத்தினைக் கொணர்ந்து இச் சபையில் அறிக்கை செய்து, தாங்கள் தாந்திரிகர்கள் என்பதனை வெளியிட்டுக் கொள்வார்களாயின், அதன்பின் அவர்களைத் தாந்திரிகர்களென்றும் வேதபாஹிய மதஸ்தரென்றும் உடன்பட்டு அவர் வார்த்தை அங்கீகரிக்கப்படும்.

அன்றியும், வைதீக சைவர், வைதீக தாந்திரிக சைவர், தாந்திரிக வைதீக சைவர், தாந்திரிக சைவர் என்னும் நால்வர்களுள் ஒருவர் என்றாவது, அல்லது நால்வரையுங் கடந்த பஞ்சம சைவர் என்றாவது சபையில் தங்களை அறிக்கை செய்து கொள்வது அவர்கள் கடமையாம்.

அன்றியும், தந்திரத்திற்கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கனுள் ஒன்றை, அல்லது நான்கனையும் அனுட்டிப்பவர் என்பதனை அறிக்கை செய்துகொள்ள றகுதியாம்.

கோவிற் பட்டியில் வசிக்கும் விருதை ஸ்ரீ சிவ ஞான யோகிகளவர்கள் தாம் எழுதிய நூலில் சிவ ஞான போதம் ரௌரவாகமத்தில் இல்லையென்றும், சுலோகங்களும் சூத்திரங்களும் சிலராற் கற்பிக்கப்பட்டனவென்றும், அதனை அநுசரித்த சிலர் அபிமாநம்பற்றி அநுஷ்டிக்கின்றனரென்றும் வரைந்திருக்கின்றமையின், வேதாந்தத்தினைத் தூஷிக்குஞ் சைவர்கள், இன்ன ஆகமத்தினைச் சார்ந்தவர்கள் என்றும், இன்ன தேயத்தவரென்றும, இயற்கையில் இன்ன ஜாதியாரென்றும், இயற்கையில் இன்ன மதத்தரென்றும் "வேதாந்திகள் ஜயக் கொடி" என்னும் வேதாந்த ஸ்தாபந மஹா விராட் சபையில் தங்களைப் பற்றி அறிக்கை செய்து கொள்ளல் அவர்கள் கடமையாம்.

போலித் தாந்திரிக சைவர், வேதாந்திகளை மாயா வாதிகள் என்று கூறுவதற்கு வேத ஆகமப் பிரமாணத்தினைக் கையிலேந்திக் கொண்டு சபையில் வந்து விண்ணப்பித்துக் கொள்ளல் ஆண்மைக் குணமுடையோர்க் கழகாம்; இன்றேல், கல்லாக் கைம்பெண்ணினிடத்துக் கரையுங் கடைக் குணமுடையோராவர்.

இவ்வாறு செய்யாது வேதாந்திகளை லெட்டர், நோட்டீஸ், புத்தகம் முதலிய வாயிலாய்த் தூஷித்தல் பஞ்சம சைவர்கட்கு ஒருவாற்றானும் பொருந்தாதாம்.

ஜீவன் சதசத்து (உண்மை யின்மை) ரூபன் என்றும், சுத்த மாயை அசுத்த மாயை என்னும் பாசங்கள் நித்தியங்கள் என்றும், ஜீவ ஈஸ்வரர் இருவரும் பாச முடையோர் என்றுங் கூறுஞ் சைவரை, எவ்வாதி யென்று கூறுவது? மாயா வாதி யென்று கூறுவதா? மாயை நித்திய வாதி யென்று கூறுவதா? பசு வாதி யென்று கூறுவதா? பாச வாதி யென்று கூறுவதா? மல வாதி யென்று கூறுவதா? பதி பரிச்சின்ன வாதி யென்று கூறுவதா? தந்திர வாதி யென்று கூறுவதா? மந்திர வாதி யென்று கூறுவதா?

**உண்மை அறைவோன்.**

உ சிவமயம்.

ஸ்ரீ சங்கராசார்ய குருப்யோ நம:

## விஜயத் துவஜ விஜயம்.

**நண்பர்களே!** **நன்றுணருங்கள்!**

பாண்டி நாட்டிற் சிறப்புற் றோங்கும் காரை மாநகரின்கண் விஜயக் கொடி என்னும் வேதாந்த ஸ்தாபந மஹா விராட் சபையில் காளயுக்தி௵ மாசி௴ 1உ (12-2-19) முதல் ஐந்து தினங்களிலும் அநேக அரிய பெரிய மஹா மஹோபாத்தியாய மஹா வித்துவத் சிரேஷ்டர்கள் வேதாந்த விஷயங்களை ஸ்தாபநஞ் செய்தார்கள். பூர்வ பக்ஷிகள் போற் றோன்றிய போலித் தாந்திரிக பஞ்சம சைவர்களை வேதாந்திகள் ஜயக் கொடி, ஓர் எச்சரிக்கை என்னும் பத்திரிகைகள் வாயிலாக இச் சபைக்கு வருமாறு அழைத்தும், வந்து எதிர்ப்படாது ஒதுங்கினர். அதனை யுணர்ந்த பெரியோர்கள், அன்பர் சிலரைப் போய், கீழ்ச் சைவ மடக் கூட்டத்தாரை, மேல மடத்திற்காவது பிரசங்கம் நடைபெறு மிடத்திற்காவது வாதத்திற்கு அழைத்து வரும்படி அனுப்பினார்கள்; அதற்குப் போலிச் சைவர்களும், சொக்க லிங்கச் செட்டியாரவர்களும் பீதி யுற்று வரமுடியா தென மறுத்துவிட்டனர். அஃதோ டமையாது நிந்தைப் பத்திரிகைகளை அச்சிட்டு மிகச் சிரம முற்று வெளியிட்டனர்.

இதனால், இன்று வரைப் பூர்வ பக்ஷிகள் வந்து எதிர்ப்படாது பயந் தொளிந்து கொண்டமையின், வேதாந்திகளுடைய சித்தாந்த பக்ஷமாகிய வேதாந்தமே ஸ்தாபிக்கப்பட்டு அதனை விளக்குவதற்கு, ஜகத் குரு ஸ்ரீ சங்கர பூஜ்ய பகவத்பாதாசார்ய ஸ்வாமிக ளவர்களின் திரு வுருவ விஜயப் பவநி நடந்து வருகின்றதனால் தாந்திரிக சைவர்கள் தோல்வி யுற்றார்க ளென்பதனையும், வேதாந்திகள் விஜயத்தினை அடைந்தார்க ளென்பதனையும் வெள் ளிடை மலை விளக்காய் உணருவீர்களாக.

இனித் தோல்வி யுற்ற சைவர்கள் பொறாமையினாலே நிந்தை நோட்டீஸ்கள் அச்சிடுவார்களாயின், பொருட்படுத்தோ மென்று அவர்கட்கும் அறைந்து, நீங்களும் உணர்வீர்களாக.

**16-2-19.** **காரிய தரிசி.**